பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 15 திங்கட்கிழமை 29.06.2020 கதிர் 236

### இது ரகசியம் அல்ல!

யாழ்பாண மாநகர சபையில் இருந்த ஒரேயொரு தீயணைப்பு வாகனமும் விபத்தில் சேதமாகி விட்டது.

புதிய தீயணைப்பு வாகனம் ஒன்றை பெற்றுத் தருமாறு ஜனாதிபதி செயலகத்துக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார் பக்கம் 02 »

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அரசும் இராணுவமும் பொறுப்பு!



## கண்கண்ட சாட்சியங்கள் இருக்கும்போது தப்பவே முடியாது என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 29

இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசும் இராணுவமும்தான் முழுப் பொறுப்பு.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இராணுவத்தினரிடம் பலர் சரணடைந்தமைக்கும், அவர்களால் பலர் கைதுசெய்யப்பட்டமைக்கும் கண்கண்ட சாட்சியங்கள் உள்ளன. எனவே, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அரசும், இராணுவமும் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். அந்தக் கடமையிலிருந்து அரசும், பக்கம் 02 »

# சர்வாதிகார ஆட்சிக்கு இடமளிக்க முடியாது!

## ஐ.தே.க. தலைவர் ரணில் முழக்கம் நேற்று முதல் பிரசாரக் கூட்டத்தில்



கொழும்பு, ஜூன் 29

இன்றைய கால இளைஞர்களுக்கு அரசியல் என்பது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் இளம் தலைமுறையினர் விருப்பமின்றி இருக்கின்றனர். ஆனால், விருப்பமில்லை என்பதற்காக சர்வாதிகார ஆட்சிக்கு நாம் இடமளிக்கக்கூடாது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பக்கம் 02 »

## பிரதமரின் உத்தரவினால் சீரானது பாரதியார் சிலை







யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி வீதி - பருத்தித்துறை வீதிச் சந்தியில் உள்ள பாரதியார் சிலையின் பக்கம் 02 »

## பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்காக விசேடமாக கொடுகடன் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டம்

### இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கை மத்திய வங்கி கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்காக ஒரு கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது, 2020 ஜூன் 26 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில், கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பக்கம் 02 »

## முற்றாக நீக்கப்பட்டது ஊரடங்கு!

கொழும்பு, ஜூன் 29

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா பக்கம் 02 »

## கொரோனாத் தொற்று - 2,037

இலங்கையில் மேலும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 2, 037 ஆக அதிகரித்துள்ளது.

பங்களாதேஷில் இருந்து வந்த ஒருவரே பக்கம் 02 »

## ஐ.தே.கவில் ரணிலுக்குப் பின் தலைமைக்கு ஐவர் போட்டி!

ரணில் விக்கிரமசிங்கவின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சிக்கு தலைமை ஏற்பது தொடர்பில் ஐவருக்கிடையில் பகிரங்க போட்டி நிலவி வருகிறது.

ரவி கருணாநாயக்க, நவீன் திஸாநாயக்க, அகில விராஜ் காரியவசம், பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாநகர பதில் மேயர்.

சேதமடைந்த தீயணைப்பு வாகனத்துக்குப் பதிலாக ஒன்றை ஜனாதிபதி செயலகத்திடம் கேட்டால், சேதமடைந்த வாகனத்துக்குக் காப்புறுதி செய்யப்படவில்லையா என்ற கேள்வி நிச்சயம் எழும். அது குறித்துத் துருவிப் பார்த்தேன்.

வருடாந்தம் ரூபா ஆறு மில்லியனுக்கு மேற்பட்ட தொகை காப்புறுதிக்குச் செலுத்தப்பட்டு வந்துள்ளதாம்.

அப்படியானால் காப்புறுதி மூலம் புதிய வாகனத்தை மீண்டும் பெறுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதுதானே, ஜனாதிபதி செயலகத்திடம் ஏன் உதவி கோருவான் என்ற கேள்வி என்னுள் பிறந்தது.

விபத்தின் பின்னர் காப்புறுதி மூலம் புதிய வாகனத்தைப் பெறுவது தொடர்பில் உரிய ஒழுங்கு முறைகளை யாழ்.மாநகர சபை நிர்வாகம் சரியாகக் கடைப்பிடித்ததா தெரியவில்லை. அதில் ஏதேனும் தவறு இருந்தால் விடயம் அவுட்!

எது, எப்படி என்றாலும், இதுவரை யாழ்.மாநகர முதல்வராக இருந்தவர் – இப்போது தேர்தலுக்காக விடுமுறையில் இருப்பவர் – ஆர்னோல்ட். அவர் காப்புறுதித்துறையில் மூத்த அதிகாரி. அத்துறையில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். அவரின் வழிகாட்டலில் காப்புறுதி மூலம் புதிய தீயணைப்பு வாகனம் விரைவில் யாழ்.மாநகர சபைக்குக் கிடைக்கும் என்று நம்புவோமாக!

★ ★ ★

நல்லூர் பாரதியார் சிலையைத் தமது தேர்தல் சுவரொட்டி மூலம் அலங்கரித்து அவலட்சணப்படுத்திய வேட்பாளர் தாமே வந்து நின்று நேற்று முன்தினம் இரவு சிலையைத் துப்புரவு பண்ணி, சுவரொட்டிகளை அகற்றினார். யார் சொல்லி அப்படி நடந்ததோ தெரியவில்லை என்று இப்பத்தியில் நேற்றுத் தெரிவித்திருந்தேன். இன்று காலையில்தான் விவரம் தெரியவந்தது.

தமது படம் போட்ட சுவரொட்டி மூலமே பாரதியார் சிலைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்ற தகவல் பிரதமருக்குப் பறந்தது. அவ்வளவுதான். யாழ். பொலிஸ் அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட வேட்பாளருக்கு செமடோஸ் விழுந்ததாம். அதுதான் அவர் தானே நேரில் வந்து நின்று சிலையின் பீடத்தை ஒழுங்காகத் துப்புரவு செய்து, படமும் பிடித்து, பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பிப் பவ்வியமாக நடந்து கொண்டிருக்கின்றார்.

சில பேருக்கு மணி கட்டின மாடு சொன்னாத்தான் காதிலை சரியாக விழும் பாருங்கோ...!

★ ★ ★

அரசியல் என்று வந்து விட்டால் – அதுவும் தேர்தல் அரசியல் என்று வந்துவிட்டால் – அதிலும் விருப்பு வாக்கு விவகாரம் என்று வந்துவிட்டால் – நாக்கு எப்படிப் புரளும் என்பது ஆச்சரியத்துக்குரியது தான்.

விருப்பு வாக்குப் பெறுவதற்காக இப்போது வேட்பாளர்கள் ஜாரி கட்டி சோடிகளாக, அணிகளாகக் களத்தில் இறங்கியிருக்கின்றமை நாம் அறிந்ததுதான்.

அதில் ஒரு வேட்பாளர் வெளிநாட்டிலிருந்து 21 கோடி ரூபா நிதியைத் திரட்டி, சுருட்டி விட்டார் என்று அந்த வேட்பாளரின் கட்சியைச் சேர்ந்த மகளிர் அணி முக்கியஸ்தரான ஓர் அம்மணி ஊடக மாநாடு கூட்டிப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். அது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

அப்படி ஒரு நிதி திரட்டும் செயற்பாடே நடக்கவில்லை. அப்படியிருக்க நான் ஏன் அதற்கெல்லாம் பதில் கூற வேண்டும் என்ற மிதப்பில் அந்த வேட்பாளர் அந்தக் குற்றச்சாட்டை உதாசீனம் செய்து நடந்து கொண்டார்.

கட்சியோ, அதன் செயற்றிறனற்ற தலைமையோ நடவடிக்கை ஏதும் எடுக்கப் போவதில்லை என்பதுதான் பலரின் கணிப்பீடு. அதுவல்ல பக்கம் 11 »

## பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு வங்கிகளின் கடன் வழங்கலை துரிதப்படுத்துவதற்கு ஒரு கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த தீர்மானித்திருக்கின்றது.

இந்த திட்டமானது, 2020 ஜூலை முதலாம் திகதி அன்று தொடங்கி வைக்கப்படவிருப்பதுடன், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ரூ. 150 பில்லியன் வரையறையினுள், சௌபாக்யா கொவிட் – 19 மறுமலர்ச்சி வசதி மற்றும் நாணய விதிச்சட்டத்தின் 83ம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட புதிய கடன் வசதிகளுடன் இணையாக செயற்படும்.

இந்த திட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியானது சிறியளவிலான கடன்களுக்காக 80 சதவீதத்திலிருந்து ஒப்பீட்டளவில் பாரிய அளவிலான கடன்களுக்கு 50 சதவீதம் என்கின்ற வீச்சில் வங்கிகளுக்கு கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்குமென்பதுடன், பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு கடன்களை வழங்க வங்கிகளை இயலச்செய்யும்.

இலங்கை மத்திய வங்கியானது கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்களவு உயர்ந்த சதவீதத்தினை உள்ளீர்ப்பதனால், பிணைகளை காட்டிலும் அத்தகைய வியாபாரங்களின் நிச்சயத்தன்மை மற்றும் நிதிப்பாய்ச்சல் என்பவற்றை கவனத்திற்கொண்டு எளிதில் பாதிப்படையக்கூடிய வியாபாரங்களுக்கு வங்கிகள் அவர்களது கடன்வழங்கலை விஸ்தரித்துக்கொள்ளமுடியும்.

வங்கிகள் வியாபாரங்களுக்கு 4 சதவீதத்தில் கடன்களை வழங்குவதற்கு தங்களுடைய சொந்த நிதியை, குறிப்பாக நோய்த்தொற்று பரவல் காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக 300 அடிப்படை புள்ளிகளினால் குறைக்கப்பட்ட நியதி ஒதுக்கு விகிதத்தினூடாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏறத்தாழ ரூ. 180 பில்லியன் மேலதிக திரவத்தன்மையினை பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியானது வங்கிகளின் நிதியியல் செலவுகளை பூர்த்திசெய்வதற்கு 5 சதவீதத்திலான வட்டி உதவுதொகையினை வழங்கும்.

இந்த திட்டத்தின் செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் விரைவாக உரிய நேரத்திற்கு வங்கிகளுக்கு வெளியிடப்படும். – இவ்வாறு அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தது.

---

## ஐ.தே.கவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாகல ரத்நாயக்க மற்றும் தயா தர்மபால கமகே ஆகியோர் இடையே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டி நிலவி வருவதுடன் அதன் முதல் கட்டமாக வெற்றிடமாக உள்ள சஜித் பிரேமதாசவின் பிரதித்தலைவர் பதவியை பெற இந்த ஐவரும் கடும் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

இதேவேளை விஜயவர்தன – விக்ரமசிங்க பரம்பரைக்கு உரிமை கோரும் ஐக்கிய தேசிய கட்சிக்கு தலைமை ஏற்க அதிக வாய்ப்புள்ள ருவான் விஜயவர்தன அமைதியான போக்கை கடைபிடித்து வருகிறார்.

இறுதியாக 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட யோசனைக்கு அமைய 2023 ஆம் ஆண்டு வரை கட்சியின் தலைவர் பதவியை வகிக்க ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடத்தைத் தேர்தல் பிரசார சுவரொட்டிகளினால் மூடிப் போர்த்தவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவை அடுத்து ஒரே நாளில் அவற்றை அகற்றி சிலையைச் சீராக்கினர்.

பிரதமரின் படம் போட்ட சுவரொட்டிகளினால் சிலை சீரழிக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவல் பிரமரின் காதுகளில் போடப்பட்டமையை அடுத்து கொழும்பிலிருந்து உத்தரவு பறந்து வந்தது.

சுவரொட்டியை ஒட்டிவித்த வேட்பாளர் நேற்று முன்தினம் இரவு தாமே நேரில் வந்து நின்று சிலையைச் சீர்செய்து மெருகேற்றினார்.

அதனையடுத்து இரண்டு படங்களையும் – சுவரொட்டி ஒட்டிய நிலையில் சிலை இருந்த படமும் சுவரொட்டிகள் அகற்றிய நிலையில் எடுக்கப்பட்ட படமும் – பிரதமர் அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவை இங்கு பிரசுரமாகியுள்ளன.

(குறிப்பு:–பாரதியார் சிலை இவ்வாறு சீர்கெடுக்கும் வகையில் பிரதமரின் படங்கள் பொறிக்கப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளினால் அலங்காரம் செய்யப்பட்டு மூடி ஒட்டப்பட்டிருக்கின்றது என்ற செய்தி 'காலைக்கதிர்' நாளிதழில் வெளியானமையை அடுத்து, அது பிரதமரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவந்தது)

---

## கொரோனாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் மேலும் 22 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி தற்போது வரை 1,661 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான கடற்படை வீரர்களில் இதுவரை 823 பேர் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

இதுவரை நாட்டில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவமும் தப்பவே முடியாது எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தவர்களை அந்த அமைப்பினரே கொன்று உடலை மறைத்தனர். எனவே, இறுதிப்போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படுபவர்கள் அப்படி காணாமல் போயிருக்கலாம். அல்லது போரில் இறந்திருக்கலாம். இராணுவத்தினரிடம் சரணடைந்த அனைவரும் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார். இது தொடர்பில் சம்பந்தன் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இறுதிப் போரில் இராணுவத்தினரைக் களத்தில் நின்று வழிநடத்திய தளபதிகளில் தற்போதைய இராணுவத் தளபதியும் ஒருவர். அவருக்கு அங்கு நடந்த உண்மை நிலைவரம் தெரியும். எனவே, உண்மைத் தகவலை அவர் வெளியிட வேண்டும். அதைவிடுத்து விடுதலைப் புலிகளின் மீது பழியைப் போட்டுவிட்டு அவர் தப்ப முடியாது.

இறுதிப்போரில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் அவருக்கு எதிராக ஐ.நாவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர் அமெரிக்காவுக்கு நுழையக்கூட அந்நாட்டு அரசால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இறுதிப் போர் தொடர்பிலும், சரணடைந்தவர்கள் குறித்தும், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றியும் அவர் தற்போது வெளியிடும் கருத்துக்களை நம்பவே முடியாது – என்றார்.

## சர்வாதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடி, மிலேனியம் சவால் (எம்.சி.சி.) ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாத்திரமின்றி இரண்டாவது அலை மூலம் தாக்கத்தை ஏற்படுத்தவுள்ள கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான திட்டங்களும் எமது ஆட்சியில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் கட்சித் தலைமையமான சிறிகொத்தாவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சூம், லிங்ட்இன் போன்ற நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:–

அரசுடன் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி அமைத்துக்கொண்டுள்ளது எனப் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாம் நாட்டு மக்களுடன் மாத்திரமே ஒப்பந்தம் செய்து கொள்வோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதால் எமக்கு ஆட்சி அதிகாரத்தை மக்கள் வழங்க வேண்டும்.

பாதிப்படைந்துள்ள பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக தற்போதைய அரசிடம் எவ்வாறான திட்டம் காணப்படுகின்றது? பணத்தை அச்சிடுவதால் பொருளாதார சிக்கலுக்குத் தீர்வு காண முடியாது.

பாதிப்படைந்துள்ள ஏற்றுமதி பொருளாதாரத்துறை, சுற்றுலாத்துறை, சிறு வர்த்தகம் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதுடன் மீண்டும் கட்டியெழுப்ப முறையான திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டும். அதற்காக அரசிடம் உள்ள திட்டம் என்ன? ஐ.தே.கவிடம் சிறந்த திட்டங்கள் காணப்படுகின்றன. அதனை எதிர்வரும் காலங்களில் செயற்படுத்திக் காட்டுவோம்.

தற்போது ஜனநாயகத்துக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எமது அரசில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை நீக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரச ஊழியர்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். இன்றைய கால இளைஞர்களுக்கு அரசியல் என்பது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் இளம் தலைமுறையினர் விருப்பமின்றி இருக்கின்றனர். ஆனால், விருப்பமில்லை என்பதற்காக சர்வாதிகார ஆட்சிக்கு நாம் இடமளிக்கக்கூடாது.

ஏனையவர்களைப் போன்று கட்சி தலைமையகத்துக்குக் கல்லெறியாது, ஆட்சியைக் கைப்பற்றி நாடு எதிர்நோக்கி வருகின்ற பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பதுடன் மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்துக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது எண்ணம். அதனால் எமக்கான பலத்தைப் பெற்றுக்கொடுக்குமாறு நாங்கள் மக்களிடம் கோரிக்கை முன்வைக்கின்றோம் – என்றார்.

---

## முற்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்ததை அடுத்து கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி, நாடு முழுவதும், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் பல்வேறு கட்டங்களாக தளர்த்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம், கடந்த 13 ஆம் திகதியில் இருந்து, நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இந்தநிலையில் நேற்று தொடக்கம் ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமல் போயிருந்தால் அது எங்ஙனம்?

## அரசைத் தெளிவுபடுத்தக் கோருகிறார் சுரேஷ்

(எஸ்.நிதர்ஷன்)

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டோரரும் காணாமல் போயுள்ளனர். அப்படிக் காணாமல் போனவர்கள் எனக் கூறப்படுவோர் இறந்து போயிருப்பார்கள் என்று இராணுவ தளபதி சவேந்திரசில்வா கூறியிருக்கும் கருத்து உண்மையானால் அவர்கள் எவ்வாறு? யாரால்? எதற்காக சொல்லப்பட்டார்கள்? என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கட்டைப்பிராயில் உள்ள அவருடைய வீட்டில் நேற்று முற்பகல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஓரிரு முக்கிய விடயங்களைக் கூறி இருக்கின்றார். அதில் ஒன்று - நாங்கள் எந்த இராணுவ முகாமையும் வடக்கில் இருந்து அகற்ற மாட்டோம் என்பது.

இங்கு இருக்கக்கூடிய மக்களுடைய காணிகள் தொடர்ச்சியாக முப்படையினருடைய வசம் இருக்கின்றது. இவர்கள் தங்களுடைய இருப்பைக் குறைத்தால் மாத்திரம்தான் காணிகளை விடுவிக்க முடியும்.

ஆகவே இது ஒரு முக்கியமான விடயம். ஆனால் இராணுவத்தினர் யுத்தம் முடிந்து பத்து வருடம் முடிந்து விட்ட பின்புகூட - வடக்கு மாகாணத்தில் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமான எந்தவிதமான சூழ்நிலையும் இல்லாதபோதும் இங்கிருந்து விலகுவதில்லைஎன்று அடம் பிடிக்கின்றனர்.

இன்னும் சொல்ல போனால் வடக்கை விட தென் மாகாணங்களில் தான் நிலைமை மிக மோசம். அங்கு தான் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுகின்றன. பாதாள உலகக் குழு நட்வடிக்கைகள் மிக தாராளமாக இடம்பெறுகின்றன. காலி கடலிலும், கொழும்பு கடலிலும் கிலோ கணக்கான போதைவஸ்துகள் கடத்தப்பட்டு வருகின்றன.

ஆகவே இராணுவத்தினர் குவிக்கப்படவேண்டிய இடங்களாக கொழும்பும், காலியும், மாத்தறையும் மற்றும் அம்பாந்தோட்டை போன்ற இடங்களும் இருக்கக் கூடியதாக அவர்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து இராணுவத்தினரைக் கொண்டு வந்து குவித்து வைத்திருப்பது என்பது தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஓர் அடக்கு முறைக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற அவர்களுடைய சிந்தனையின் வெளிப்படையாகத்தான் இருக்கின்றது.

ஆகவே யார் என்ன சொன்னாலும், வடக்கை விட்டு இராணுவத்தினரை அகற்ற மாட்டோம் என்று கூறுவது ஓர் ஏற்புடைய் நிலைப்பாடாக நிச்சயமாக இல்லை.

தேவைக்கு மேலதிகமான இராணுவத்தினர் குறைக்கப்படலாம். அதனூடாக தமிழ் மக்களுக்கு ஒரு காத்திரமான ஜனநாயக சூழலை ஏற்படுத்திக் கொடுக்கலாம். என்ன காரணத்திற்காக இவர்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஓர் இராணுவ அடிமைத்தனத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்கு நிச்சயமாக இவர்களிடம் பதில் இல்லை.

வடக்கு மாகாணம் என்பது வாள் வெட்டு என்ற சிறிய விடயத்தைத் தவிர ஓர் அமைதியான பிரதேசமாக இருக்கின்றது. பொலிஸார் மனம் வைத்தால் இந்த வாள்வெட்டுக் கும்பலை இல்லாது செய்ய முடியும். அதே போல கஞ்சா கடத்தல் போன்ற விடயங்களையும் நிறுத்த முடியும்.

இதற்கெல்லாம் இராணுவமயமாக்கப்பட வேண்டும் என்ற தேவை நிச்சயமாக இல்லை என்பதை சவேந்திர சில்வாவுக்கு நாங்கள் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே இந்த நிலைமைகள் வடக்கு மாகாணத்தில் மாற்றமடைய வேண்டும் அல்லாதுவிட்டால் நிச்சயமாக இவர்கள் தாங்களாகவே தமிழ் மக்களை - அது ஒரு ஜனநாயக போராட்டமோ அல்லது ஏதோ ஒரு விதத்திலான போராட்டமாகவோ இருக்கும் - அதற்குள் தொடர்ந்து தள்ளக்கூடாது.

ஜே.ஆ.ஜெயவர்த்தன ஆட்சியிலும் அடக்குமுறைகள் தான் மக்களை போராட்ட களங்களுக்குள் தள்ளின் என்பதை தயவு செய்து இந்த இராணுவ உயர் அதிகாரி கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் இப்போது இவர்கள் எடுத்திருக்கக் கூடிய முடிவுகள் ஏற்புடையனவாகத் தெரியவில்லை.



அதே போலதான் சவேந்திர சில்வா இன்னுமொரு விடயத்தையும் கூறி இருக்கின்றார். காணாமல் போனவர்கள் என்பவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் அல்லது இறந்துபோய் இருப்பார்கள் என அவர் கூறுகின்றார்.

ஒரு விடயத்தை இராணுவத் தளபதி மறந்து விட்டார். அதாவது சரணடைந்தவர்கள், பொதுமக்களுக்கு முன்னால் சரணடைந்தவர்கள், தமது பெற்றோர்களால் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள். இவர்கள் இறந்து போனார்கள் என்றால் எவ்வாறு இறந்து போனார்கள் என்பதை சவேந்திர சில்வா வெளிப்படுத்த வேண்டும்.

அவர்கள் இறந்து போனமைக்கான காரணம் என்ன? சரணடைந்தவர்களும் அவர்களிடம் கையளிக்கப்பட்டவர்களும் இறந்து போய்விட்டார்கள் என்று கூறினால் எவ்வாவாறு இறந்து போனார்கள்? கொலை செய்யப்பட்டார்களா? யாரால் கொல்லப்பட்டார்கள்? அல்லது நூற்றுக்கணக்கில், ஆயிரக் கணக்கில் அவர்கள் இறந்திருப்பதற்கு வேறு எந்தவித காரணங்களும் நிச்சயமாகக் கிடையாது.

ஆகவே ஒரு அரசாங்கத்திடம் சரணடைந்தவர்கள், அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை என்று கூறினால் அரசாங்கம் அதற்கான முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

அவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதை அரசாங்கம் வெளிப்படையாக சொல்லவேண்டும். அவ்வாறு சொல்லத் தகுதியற்ற அரசாங்கமாக அது இருக்குமாயின், அரசாங்கம் அரச பயங்கரவாதத்தைதமிழ்மக்கள் மீது ஏவிவிடுகிறதென்பது அப்பட்டமான - வெளிப்படையான - ஒரு விடயமாக நிச்சயமாக இருக்கும்.

ஆகவே இராணுவத் தளபதி சொன்னவை உண்மையாக இருந்தால் அரசாங்கம் அதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டு இவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

இல்லை என்றால் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொண்டு அந்த விசாரணைக்கு அவர்கள் தங்களை தாங்களே உட்படுத்தவேண்டும். அப்படி நடந்தால் மாத்திரம்தான் தமிழ் மக்களுக்கான குறைந்த பட்ச நீதியாவது கிடைக்குமென நான் கருதுகின்றேன். -எனத் தெரிவித்தார்.

# 1000 ரூபா என்பது அரசியல் ஆயுதம்

## வேலுகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

கூட்டுஒப்பந்தம் என்ற அடிமை சாசனத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டு, மக்களிடம் சந்தா வசூலித்து - சமூகமாற்றத்தை தடுத்து - அரசியல் பிழைப்பு நடத்துவதற்காகவே ஆயிரம் ரூபா என்பது அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டுவருகின்றது. - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

நாவலப்பிட்டிய பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் வேட்பாளர் வேலுகுமார் மேலும் கூறியதாவது -

1992 ஆம் ஆண்டுக்கு பிறகே கூட்டு ஒப்பந்த முறைமை அமுலுக்குவந்தது. வாழ்க்கைச்சுமைக்கேற்ப சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதற்காகவே இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை அவ்வொப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதேபோல் தொழில்சார் உரிமைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சில நாடுகளில் இந்த நடைமுறை வெற்றியளித்துள்ளது. ஆனால், இலங்கையில் முழுமையாக தோல்வி கண்டுள்ளது என்றே கூறவேண்டும். தொழிலாளர்களுக்கான அந்த உடன்படிக்கை அடிமைசாசனம்போலவே பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

90 காலப்பகுதியில் இருந்து உரியவகையில் சம்பள அதிகரிப்பு இடம்பெற்றிருந்தால் இந்நேரம் ஆயிரத்தை தாண்டி சம்பளம் பெறுபவர்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இருந்திருப்பார்கள். ஆனால் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் அற்பசொற்ப சலுகைகளுக்காக கம்பனிகளிடம் சரணடைந்து, தொழிலாளர்களை அப்பட்டமாகக்காட்டிக்கொடுத்தன. எமது தொழிலாளர்களுக்கான தீர்வு கூட்டுஒப்பந்தம் அல்ல என்பது அனைத்து வழிகளிலும் இன்று உறுதியாகியுள்ளது.

எனவே, எமது ஆட்சியின்போது இதற்கு மாற்றுவழிமுறை தேடப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கு திட்டமிட்டிருந்தோம். ஆயிரம் ரூபாவுக்கு அதிகம் வருமானம் உழைக்கும் வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுக்க கொள்கைகள் வகுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் தொழிலாளர்களின் முன்னேற்றத்தை தடுத்து அவர்களை தொடர்ந்தும் மீளா வட்டத்துக்குள் வைத்துக்கொள்வதற்காகவே ஆயிரம் ரூபா, ஆயிரம் ரூபா என கூவித்திரிகின்றனர். ஆயிரம் ரூபாவை ஏற்பதன் ஊடாக கூட்டு ஒப்பந்ததம் நீடிக்கப்படவேண்டும் என்பதற்கு அங்கீகாரத்தையும் வழங்குகின்றனர்.

அதேபோல் ஆயிரம் ரூபா மட்டுமல்ல அதையும்தாண்டி எமது மலையக மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன . அவற்றையும் தேசிய மயப்படுத்தவேண்டும். அப்பணியை தடுப்பதற்கான சூழ்ச்சி அரசியலும் இந்த ஆயிரம் ரூபாவின் பின்னணியில் உள்ளது. எனவே, இந்த சமூகத்துக்கு சாபக்கேடாக இருக்கும், கறுப்பாடுகளுக்கு மக்கள் பாடம் புகட்டவேண்டும். - என்றார்.

# ஆயிரம் ரூபா சம்பளம் என்பது கனவல்ல; அதனைப் பெறும் இறுதிக்கட்டத்தில் நாம்

## மஹிந்த எம்முடன் இருப்பதால் சந்தேகமில்லை என்கிறார் செந்தில்

ஆயிரம் ரூபா சம்பளம் என்பது வெறுமனே எமது கனவல்ல. அதனை நனவாக்கி முடிக்க வேண்டியது எமது கடமை. நிச்சயமாக நாம் அதனை செய்து முடிப்போம். அதில் எவரும் எவ்விதமான சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிலர் தமது அரசியல் தேவைகளுக்காக ஆயிரம் ரூபாய் என்பது கனவு என்றும், அதனைப் பெற்ற பின்னர்தான் நம்பிக்கை வரும் என்றும் கூறுகிறார்கள். ஆனால், கொரோனா வைரஸ் தாக்கம் மட்டும் வந்திராவிட்டால் எமது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தது போன்று ஆயிரம் ரூபாய் ஏப்ரல் மாதத்துடன் கிடைத்திருக்கும்.

இப்போது இந்த விடயத்தில் இறுதிக் கட்டத்தை நாங்கள் அடைந்திருக்கின்றோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ச தற்போது இந்த துறைக்கான அமைச்சராக இருக்கின்றார். இந்த விடயத்தில் பிரதமர் மிகவும் ஆழமான கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார். அண்மையில் நடந்த பேச்சில் கம்பனிகளுக்கு அவர் இறுக்கமான ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கின்றார். அதாவது எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் இவ்விடயத்தைச் சேர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக ஒரு தீர்க்கமான முடிவைத் தரவேண்டும் என்று கூறுகின்றார். அது நிச்சயம் நல்ல முடிவாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கேட்பவர்கள் கேனயன்கள் என்றால்...!

'கேட்பவன் கேனயனாக இருந்தால் கேப்பையிலும் நெய் வடியும்' என்பார்கள்.

அப்படிக் கேட்பவர்களை முட்டாள்களாக நினைத்துக் கொண்டு இரு 'வித்துவான்கள்' கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஒருவர் - கருணா

மற்றவர் - இராணுவத் தளபதி.

கருணா என்றாலே தமிழ் மக்களுக்கு காட்டிக் கொடுப்புத்தான் நினைவுக்கு வரும்.

தமிழர்களின் மூன்று தசாப்த காலப் போராட்டத்தையே தனது காட்டிக் கொடுப்பு மூலம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிச் சீரழித்த பெருமைக்குரியவர் அவர். அதனால் தென்னிலங்கைச் சிங்களத்தால் தலையில் வைத்துக் கொண்டாடப் பட்டவர்.

தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் காட்டிக் கொடுப்புக்கு, முன்னர் எல்லாம் 'காக்கை வன்னியன்' என்ற பெயரே குறிப்பிடுவது வழக்கம். அதை மறந்து இப்போதெல்லாம் 'கருணா' என்ற பெயரே அதற்கு அடைமொழியாக வைத்துள்ளனர்.

அப்படி இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வாழ்வை நாசமாக்கிய காட்டிக் கொடுப்பு நாயகன் அவர்.

'சட்டியைப் பார்த்துப் பானை கறுப்பு என்று கூறிய கதை மாதிரி' அவர் - கருணா - தமிழர் விடுதலைப் போராட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காட்டிக் கொடுத்தது என்று வியாக்கியானம் கூறியிருக்கின்றார்.

காட்டிக் கொடுப்பில் உச்ச சாதனையில் இருக்கும் கருணா, இன்னொரு தரப்பைப் பார்த்து 'காட்டிக் கொடுப்பு' குறித்துப் பேசுவதற்கு எந்த அடிப்படைத் தகைமையுமற்றவர்.

அவர் 'காட்டிக் கொடுப்பு' குறித்து பேச விழைவது 'கேப்பையிலும் நெய் வடியும்' என்ற கதையை ஒத்ததுதான்.

அடுத்தது - யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அவிழ்த்து விட்டிருக்கும் புதுக்கதை.

இதுவரை காலமும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் காணாமல் போனோர் என்று கூறப்படுவோர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற கருத்தே தென்னிலங்கையினால் முன்வைக்கப்பட்டு வந்தது.

அதை மாற்றி, புலிகளே புலிகளைக் கொன்றிருக்கலாம் என்று கூறியிருக்கின்றார் இராணுவத் தளபதி.

யுத்தத்தின் இறுதிச் கட்டத்தில் புலிகளே புலிகளைக் கொன்றார்கள் என்றும்,அங்கு காணாமல்போன பொது மக்களை இராணுவம் கொல்லவில்லை, விடுதலைப் புலிகளே கொன்றார்கள் என்றும் ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம்.

அதுதான் உண்மை என்றால் அது குறித்து விசாரிப்பதற்கு - நீதியான விசாரணை நடத்துவதற்கு - இராணுவம் ஏன் பின்னடிக்க வேண்டும்? ஏன் முட்டுக்கட்டை போட வேண்டும்? சந்தோஷமாகவே அதற்கு ஒப்புக் கொண்டு நீதியான விசாரணைக்கு இணங்கலாமே?

அதுவும் சர்வதேச நீதிப் பொறிமுறைகளுக்கு இணங்க நியாயமான ஒரு விசாரணைக்கு உடன்பட்டால் உண்மை வெளிவரும் அல்லவா?

'மடியில் கனமில்லை என்றால் வழியில் பயமில்லை' என்பார்கள். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில், இராணுவத் தரப்பில் தவறில்லை என்றால் - புலிகள்தான் அதற்குக் காரணம் என்றால் - சர்வதேச நீதி விசாரணையை ஏற்க ஆட்சித் தரப்பும் இராணுவமும் ஏன் அஞ்ச வேண்டும்? புலிகளை மாட்டி வைத்து அம்பலப்படுத்துவதற்காக சந்தோஷமாக அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் அல்லவா?

அப்படிச் செய்தால் சர்வதேச ரீதியில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் தமக்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் இருந்து தமது பெயரை விடுவித்து தம்மீதான கறையையும் இராணுவத் தளபதி நீக்கிக் கொள்ள முடியும் அல்லவா?

ஆனால், அதற்கு அவர்கள் இணங்கவும் மாட்டார்கள். புலிகளே புலிகளையும் காணமல் போனோரையும் கொன்றொழித்தார்கள் என்ற தமது பரப்புரையை நிறுத்தவும் மாட்டார்கள்.

ஏன் என்றால், கருணா, இராணுவத் தளபதி போன்றோர் கேட்பவர்கள் கேனயன்கள் என்று நினைத்துக் கொண்டு கருத்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வளவே.

# அரசுக்கு வைத்த பொறியில் சிக்கி சின்னாபின்னமாகிய சஜித் அணி

## கருணா போட்டுத்தாக்கு



அரசுக்கு வைத்த பொறியில் சஜித் பிரேமதாஸ சிக்குண்டு சின்னாபின்னமாகி உள்ளார். எனது தேர்தல் பிரசார உரையை பூதாகரமாகப் பெருப்பித்து அரசியலில் எதிர்வரும் தேர்தலில் அரசை வீழ்த்த முனைந்த அவரது கனவுகள் சிதறிப்போயுள்ளன.

- இவ்வாறு தமிழர் மகா சபை சார்பில் அம்பாறை மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் மேலும் தெரிவித்தாவது:-

முப்பது நிமிடங்களுக்கு மேலாக உரையாற்றிய எனது தேர்தல் பேச்சை 30 செக்கன்களில் வேண்டுமென்றே எடிட் செய்து ஒளிபரப்பு செய்த சில ஊடகங்கள் மூலமாக அதனை அரசுக்கு எதிரான கருவியாகப் பயன்படுத்த சஜித் பிரேமதாஸ தரப்பினர் முயன்றனர். இருந்தாலும் அதில் அவர்கள் தோல்வியை கண்டுள்ளனர்.

வடக்கு கிழக்கில் அல்லது தென்னிலங்கையில் என்னைக் குற்றம் சுமத்த எவருக்கும் அருகதை கிடையாது. ஏனெனில் நான் விடுதலைப்புலிகளுடன் இருந்து நேரடியாக இலங்கை இராணுவத்துக்கு எதிராகப் போரிட்டவன். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இப்போது அரசியல் செய்யும் பலரும் விடுதலைப்புலிகளுக்கு மறைமுகமாக தமது ஆதரவை போர்க்காலத்தில் தெரிவித்தவர்கள்.

எனவே, முதலில் அவர்களைத்தான் கைது செய்ய வேண்டும். அதிலும் சஜித் பிரேமதாஸவின் தந்தையார் தலைமை வகித்த ஐக்கிய தேசியக் கட்சியே விடுதலைப்புலிகளுக்குத் தேவையான அளவு ஆயுதங்களை வழங்கி அவர்களை வளர்த்து விட்டது. அதேபோன்று அரசியல் நடத்தும் மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பொங்குதமிழ் நிகழ்ச்சிகளிலும, ஏனைய பல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளனர். அதற்கான வீடியோ ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

எனவே, என்னைக் கைது செய்ய முன்னர் அவர்களையும் கைது செய்ய வேண்டும். ஆகவே, இது ஒரு அரசியல் நாடகம். தேர்தல் மேடைகளில் பேசியதற்காக ஒருவரைக் கைதுசெய்ய வேண்டும் என்றால் இன்று தேர்தல் மேடைகளில் பேசுகின்ற பெரும்பாலானவர்களைக் கைதுசெய்ய வேண்டும்.

எனவே, இது ஓரிரு அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக சோடிக்கப்பட்ட ஒரு வடிவமே அன்றி வேறு எதுவும் இல்லை. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்ட நாங்கள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற விருப்பம் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

போரில் இரு தரப்பிலும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இருதரப்பிலும் பலரும் இறந்துள்ளனர். போர் மூலமாக இறந்த அனைவரும் செய்த தியாகங்களை நாங்கள் மதிக்க வேண்டும்.

எனவே, இனிமேலும் இது போன்ற சில்லறைத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடாது நாட்டில் சமாதானத்தை கொண்டுவர அனைவரும் முயற்சி செய்ய வேண்டும் - என்றார்.

# 134 ஆசனங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெறும் மொட்டு

## தேசியப் பட்டியல் வேட்பாளர் அலி சப்ரி நம்பிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் 134 ஆசனங்களைக் கைப்பற்றி அமோக வெற்றியைப் பெறும் என்பதால், அந்தக் கட்சியுடன் இணைந்து தமது வேலைகளைச் செய்து கொள்வதா? இல்லை, கடந்த காலத்தில் போன்று துன்பங்களை அனுபவிக்க வேண்டுமா? - என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளரான ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புள்ளிவிவரங்களுக்கு அமைய பொதுஜன முன்னணிக்குக் குறைந்தது 134 ஆசனங்கள் கிடைக்கும். அது சில நேரத்தில் 140 ஆகவும் மாறலாம். நாங்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையான 150 ஆசனங்களைப் பெறவே முயற்சித்து வருகின்றோம்.

நாங்கள் கடந்த முறை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 68 இலட்சம் வாக்குகள் கிடைக்கும் எனக் கூறிய போது சிரித்தனர். கணக்கிட்டுப் பார்க்கும் போது 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. இதன் பின்னர் எப்படி இதனை அறிந்துகொண்டீர்கள் எனக் கேட்டனர். இது சாதாரண அறிவு. புள்ளி விவரங்கள், மக்களின் இதயத்துடிப்பு, இவற்றைப் புரிந்துக்கொண்டால் தவறுவதற்கு வாய்ப்பில்லை.

பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமோக வெற்றியைப் பெறும். அப்படியானால், அரசுடன் இணைந்து தமது வேலைகளைச் செய்துகொள்ள வேண்டுமா, இணைந்து இந்தப் பயணத்தைச் செய்வதா, இலங்கையர்கள் என்ற வகையில் அனைவரும் இணைந்து நாட்டின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வலுச்சேர்ப்பதா, அப்படியில்லை என்றால், கடந்த காலத்தைப் போன்று பிரிந்து துன்பப்படுவதா, ஒன்றாக இணைந்து தற்காத்துக்கொள்வதா அல்லது பிரிந்து அழிந்து போவதா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் - என்றார்.

# சலுகைக் காலம் மேலும் நீடிப்பு

கொவிட் 19 பரவலையடுத்து, சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக வழங்கப்பட்ட சலுகைக் காலத்தை மேலும் நீட்டித்துள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 2020 மார்ச் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை யான காலப்பகுதியில், சாரதி அனுமதிப்பத்திர காலம் நிறைவடைந்த சகல அனுமதி பத்திரங்களுக்கும் கால எல்லை முடிவடையும் இறுதி திகதியிலிருந்து, மேலும் 6 மாதங்களுக்கு செல்லுப்படியாகும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தள்ளது.

# வடக்கு, கிழக்கு தமிழர்களின் பூர்வீகப் பிரதேசம் அதை எவரும் மறுக்க முடியாது என்கிறார் வாசு



**வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக பிரதேசம் என்பதை எவராலும் மறுக்க முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக பிரதேசம் அல்ல என தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ள கருத்து தொடர்பாக தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், செயலணியின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதியிடம் தனிப்பட்ட முறையில் பேசவுள்ளேன். அரசாங்கத்தின் கொள்கைக்கு அமையவே செயலணிகள் செயற்பட வேண்டும்.

ஒரு பிரதேசத்தில் எந்த இனத்தவர்கள் அதிகளவில் வாழ்கின்றார்களோ அங்கு அந்த இனமே பெரும்பான்மையினமாக கருதப்படும்.

தெற்கில் சிங்களவர்கள் அதிகமாக வாழ்கின்றமையினால் அம்மாகாணத்தை சிங்களவர்கள் உரிமைக் கொண்டாடுகிறார்கள் அதேபோலதான் வடக்கு கிழக்கும்.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மக்கள் வரலாற்று காலம் தொடக்கம் வாழ்ந்துள்ளமைக்கான ஆதாரங்கள் மத ஸ்தலங்களின் ஊடாகவும் மத வழிப்பாடுகளுடனும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு. அனைத்து இன மக்களின் உரிமை மற்றும் கலாசாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாட்டை பிரித்தாள வேண்டும் என்ற எண்ணத்தினால் யுத்தம் தோற்றமடைந்தது. நாடு பிளவுப்படுவதற்கு எப்போதும் அனுமதி வழங்க முடியாது. இருப்பினும் முரண்படாத வகையில் அவரவர் உரிமைகள் வழங்கப்படுதல் அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஏழாலையில் வீடுடைத்து 14 பவுண் நகை அபேஸ்!

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியில் நேற்று அதிகாலை வீடொன்று உடைக்கப்பட்டு 14 பவுண் நகை திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஏழாலை களவாடை அம்மன் கோவிலடியில் உள்ள வீடொன்று நேற்று அதிகாலை திருடர்களினால் உடைத்து திருடப்பட்டுள்ளது. வீட்டில் உள்ளவர்கள் தூங்கிக் கொண்டிருந்த சமயம் மர்மமான முறையில் வீட்டிற்குள் திருடர்கள் நுழைந்துள்ளனர்.

வீட்டில் இருந்த 14 பவுண் நகைகளை இதன்போது அவர்கள் திருடிச் சென்றுள்ளனர். வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்து எழும்பிப் பார்த்த போது வீடு உடைக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டிருந்தமையை அவதானித்துள்ளனர்.

உடனடியாக இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## குடும்பத்துடன் நீராடச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, ஜீன் 29

வாழைச்சேனை, மீராவோடை - புளியடித்துறை பகுதியில் குடும்பத்தோடு நீராட சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

இவர் குடும்பத்தினரோடு ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரெனக் காணாமல் போயுள்ளார். மிக நீண்ட நேரத்திற்குப் பின்னர் ஆற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது. வாழைச்சேனை - செம்மண்ணோடையைச் சேர்ந்த பதினேழு வயதுடைய பௌசுல் பாகிம் என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்த இளைஞனின் சடலம் பிரதே பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கைதிகளுக்கு 'சப்ளை' செய்யும் ஐந்து பேர் மடக்கப்பட்டனராம்!

பொரளை பொலிஸ் அதிகாரிகள் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் கைதிகளுக்கு கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை பெற்றுக் கொடுத்த வெலிக்கடை மற்றும் மெகசின் சிறைச்சாலைகளுக்கு அருகில் வசிக்கும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின், ஐஸ் மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருள்களும் சந்தேக நபர்களால் கைதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தப் பொருள்கள், சிறைச்சாலைகளின் மதிலுக்கு அருகில் இருந்து பல்வேறு முறைகளால் கைதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, அனைத்து சிறைச்சாலைகளிலும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சிறைச்சாலைகளின் புலனாய்வு பிரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனியா தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் நாளாந்தம் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளா

# ஊடகவியலாளர்கள், ஊடகச் செயற்பாட்டாளர்கள் தமிழர் தாயகத்திலும் பழிவாங்கும் பாணியில் இலக்கு

## யாழ்.ஊடக அமையம் விசனத்துடன் அறிக்கை

அண்மைக்காலமாக மீண்டும் அதிகரித்துவரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான கெடுபிடிகள், அச்சமானதொரு சூழலைத் தோற்றுவித்து வருகின்றமை தொடர்பில் யாழ்.ஊடக அமையம் தனது ஆழ்ந்த கவலையைப் பதிவு செய்யவிரும்புகின்றது என அது நேற்று வெளியிட்டுள்ள அறிக்க ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த காலங்களில் வடகிழக்கு தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஊடக அடக்குமுறைகள், படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்குதல்கள் தொடர்பில் யாழ்.ஊடக அமையம் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்திருந்தது. நீதி கோரிய அதனது பயணத்தின் போது தென்னிலங்கை ஊடக அமைப்புக்களும் ஆதரவு குரல் கொடுக்கத் தவறவில்லை.

இந்நிலையில் தற்போது தென்னிலங்கையும் அத்தகைய சூழலை எதிர்கொள்ள தொடங்கியுள்ள நிலையில் யாழ்.ஊடக அமையம் தனது ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஆயினும் தெற்கு போலன்றி வடகிழக்கு தமிழர் தாயகத்திலும், சத்தம் சந்தடியின்றி ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக செயற்பாட்டாளர்கள் மீண்டும் பழிவாங்கும் பாணியில் இலக்கு வைக்கப்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது.

கடந்த இரண்டு மாத காலப்பகுதியினுள் இத்தகைய எட்டிற்கும் அதிகமான சம்பவங்கள் வடக்கில் மட்டும் அரங்கேறியுள்ளது. குறிப்பாக படுகொலை செய்யப்பட்ட எமது சக ஊடகவியலாளன் ஜயாத்துரை நடேசனை நினைவு கூர்ந்து மிக எளிமையாக ஊடக அமையத்தில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் அச்சுறுத்தலிற்குள்ளானது.

வெறும் ஏழு ஊடகவியலாளர்கள் மட்டும் பங்கெடுத்த அந்த நினைவேந்தலை தடுக்க முற்றுகையிடப்பட்டதுடன் சுமார் 14 காவல்துறையினர் சீருடையுடனும் சிவிலிலும் குவிக்கப்பட்டனர்.

அத்துமீறி ஊடக அமையத்தினுள் புகுந்த இத்தரப்புக்கள் ஊடகவியலாளர்கள் தொடர்பில் தகவல் திரட்ட முற்பட்டனர். அத்துடன் அச்சுறுத்தலையும் விடுத்தனர்.

இதேவேளை கொல்லப்பட்ட மக்களை நினைந்து முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல்கள் தொடர்பில் தமது ஊடகப் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் பலரும் யாழ்.காவல்நிலையப் பொறுப்பதியால் மிரட்டப்பட்டனர். வலிந்து ஊடகவியலாளர்கள் புகைப்படமும் பிடிக்கப்பட்டிருந்தனர்.

அதே போன்று மே18 செய்தி சேகரிப்பு பணிக்கென யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைதீவு சென்ற ஊடகவியலாளர்கள் ஆறிற்கும் மேற்பட்ட இராணுவ சோதனைச் சாவடிகளில் திட்டமிட்டு தடுக்கப்பட்டனர். இலங்கை அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டையினை சமர்ப்பித்தும் இழுத்தடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதேவேளை முல்லைதீவில் பணியாற்றிவருகின்ற ஊடகவியலாளர்கள் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இராணுவத்தளபதியின் வருகையை அறிக்கையிட சென்ற ஊடகவியாளர் பணியாற்ற முடியாது தடுக்கப்பட்டார். அச்சுறுத்தலை எதிர்கொண்டார். ஏற்கனவே வெவ்வேறான பல சந்தரப்பங்களில் தாக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் நெருக்கடிகள் மத்தியில் தனது பணியை தொடர்கின்றார். அவரை போன்றே முல்லைதீவில் மேலும் பல ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொண்டவாறே தமது பணியினை ஆற்றிவருகின்றர்.

இதே போன்றே வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னாரிலும் சுதந்திரமாக தமது ஊடகப்பணியினை முன்னெடுக்கமுடியாது ஊடகவியலாளர்கள் தடுக்கப்பட்ட சம்பவங்கள் அரங்கேறியுள்ளமையுடன் சுதந்திரமான ஊடகப்பணி கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஏற்கனவே திருகோணமலையில் சமூக ஊடகங்களில் தமது கருத்துக்களைப் பதிவு செய்த இளைஞர்கள் விசாரணைகளிற்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பில் கொலை மிரட்டல்கள் சரளமாக விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நெருக்கடிகள் மத்தியில் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களிற்கான நீதி கோரிய பயணத்தின் மத்தியில் ஊடக சுதந்திரத்தை பேண அரசை யாழ்.ஊடக அமையம் வலியுறுத்த விரும்புகின்றது.

வட கிழக்கிலாயினும் சரி நாட்டின் ஏனைய பகுதிகளிலாயினும் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக பணியாற்றுவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவே நாம் கோரி நிற்கின்றோம்.

அதேவேளை காலத்தின் தேவை கருத்தி தென்னிலங்கை ஊடக அமைப்புக்களுடனும் சர்வதேச ஊடக அமைப்புக்களுடனும் கைகோர்த்து ஊடக சுதந்திரத்திற்கான பயணத்தில் இணைந்து செயற்பட யாழ்.ஊடக அமையம் தனது பகிரங்க அழைப்பினையும் இச்சந்தர்ப்பத்தில் விடுக்க விரும்புகின்றது. - என்று உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# சீனாவுக்குப் பதிலடி வழங்கப்பட்டது வானொலி நிகழ்ச்சியில் மோடி பேச்சு



லடாக் மோதலின் போது சீனாவின் அத்துமீறலுக்குத் தக்க பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது என்று 'மன் கி பாத்' (மனதின் குரல்) என்கிற வானொலி நிகழ்ச்சியில் பேசிய இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். அந்த நிகழ்ச்சியில் மோடி மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா தனது எல்லையையும், அதன் இறை யாண்மையையும் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது என்ற நிலையை உலகம் கண்டுள்ளது. லடாக்கில் நமது எல்லைக்குள் நுழைய முயற்சித்தவர்களுக்குத் தக்கபதிலடி கொடுக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு எப்போது நிறைவடையும் என மக்கள் பெரும்பாலா னோர் பேசிக்கொண்டிருக்கின்றனர். இந்த ஆண்டு மிகவும் சவால்கள் நிறைந்ததாக உள்ளது என மக்கள் நினைக்கிறார்கள். சவால்கள் அதிகமாக இருக்கலாம் ஆனால் நாம் இந்தச் சவால்களில் இருந்து மீண்டு வரலாம் என்பதை நமது வரலாறு நமக்கு நினைவு படுத்திக்கொண்டே இருக்கிறது. இந்த சவால்களுக்கு பின்னர் நாம் மிகவும் வலிமையாக முன்னேறி வரு வோம் – என்றார்.





## இறந்த உடலை ஜே.சி.பியால் தூக்கியது வேதனைக்குரியது

கொரோனாவால் இறந்தவரின் உடலை ஜே.சி.பி இயந்திரத்தால்தூக்கிச்சென்றசெயலுக்குஆந்திராவின் முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி வேதனை தெரிவித்துள்ளார். ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம் பலசா நகரில் கொரோனா வைரஸால் இறந்தவரின் உடலை ஜே.சி.பி இயந்திரத்தால் எடுத் துச் சென்ற அவலம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

உடலைப் புதைக்க யாரும் முன்வராத நிலையில், நகராட்சி ஊழியர்கள் அந்த இயந்திரத்தின் மூலம் உடலை மயானத்துக்கு எடுத்துச் சென்றதாகத் தெரி விக்கப்படுகிறது. இந்த மனிதாபிமானமற்ற செய லுக்கு ஜெகன்மோகன் ரெட்டி வேதனை தெரிவித் தார்.

இது குறித்து அவர் தன்னுடைய கீச்சகப் பக்கத் தில் இட்ட பதிவில், 'கொரோனா நோயால் இறந்தவரின் உடலை இயந்திரத்தில் கொண்டு சென்ற சம்பவத் தைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். சிலர் மனிதாபி மானமற்றவர்களாக இருப்பது வருத்தமளிக்கிறது.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க பொறுப்புள்ளவர்கள் மீது கடுமையான நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டி ருந்தார்.

## என்னிடமிருந்த பணம் குறைவு

### சசிகலா தெரிவிப்பு



கைது செய்யப்பட்ட சசிகலாவிடம் 1ஆயிரத்து 911 கோடியளவான (இந்திய மதிப்பில்) பணமதிப்பிழப்புச் செய்யப்பட்ட பணம் இருந்ததாகத் தெரிவித்தனர். இதை மறுத்துக் கருத்துத் தெரிவித்த சசிகலா, தன்னிடம் மதிப்பிழப்புச் செய்யப்பட்ட 48.31லட்சம் ரூபா மட்டுமே இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட காலத்தில் தான் வைத்திருந்த பணமதிப்பிழப்பு செய்யப்பட்ட தாள்களை தனது நிறுவனத்தின் வங்கிக் கணக்கில்செலுத்திவிட்டதாகஅவர்கூறியிருப்பதும் தெரியவந்துள்ளது. பினாமி சொத்து பரிவர்த்தனைத் தடைச் சட்டம், 1988இன் கீழ் நடவடிக்கைகள் எடுப்பதற்காக இணை இயக்குநர் எழுதிய அந்தக் கடிதத்தில் தங்களால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களின்படிசந்தேகத்துக்கு இடமான வகையில் ஆயிரத்து 674 கோடி சொத்துக்கள்வாங்குவதற்காகவைத்திருந்ததாகக் கூறப்பட்டிருந்தது.

சசிகலா சார்பாக ஜனவரி 3ஆம் திகதி அவருக்கு அளித்த பதிலில், குறித்த பணம் சசிகலாவுக்குச் சொந்தமானதல்ல, 3ஆம் நபருடையது என்று குறிப்பிடப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## சித்திரவதையை கடும் குற்றமாக்க வேண்டும்

பொலிஸார் மேற்கொள்கின்ற சித்திரவதையைத் தண்டனைக்குரிய தனிக் குற்றமாக அறிவிக்குமாறு இந்திய அரசுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சமம் குடிமக்கள் இயக்கம் கோரிக்கை வைத்துள்ளது.

சமம் குடிமக்கள் இயக்கத்தின் மாநிலத் தலைவர் வழக்கறிஞர் சி.சே.ராசன் இதுகுறித்துத் தெரிவிக்கை யில், சாத்தான்குளத்தில் பென்னிக்ஸ், அவரது தந்தை ஜெயராஜ் இருவரையும் பொலிஸார் கொடூரமாகத் தாக்கி உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ளனர். கோவில்பட்டி எட்டயபுரம் மேலைத்தெருவைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளி கணேசமூர்த்தி பொலிஸாரின் சித்திரவதை தாங்க முடியாமல் தற்கொலை செய்துள்ளார். கொரோனா ஊரடங்கைப் பொலிஸார் தவறுதலாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

சித்திரவதைகள் சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இதர நபர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்து கைது செய்ய வேண்டும். வழக் கைப் சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்றார்.

## 24 மணி நேரத்தில் 19,000 பேர் பாதிப்பு




இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 19 ஆயிரத்து 906 பேருக்குக் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த் தப்பட்டு, பொதுவெளியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்தி ருப்பதாலும், பரிசோதனைகளை அதிகரிப்பதாலும் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்கிறது.

இந்த நிலையில், இந்தியாவில் கொரோனா வைரஸ் தொடர்பான விவரங்களை சுகாதாரத்துறை வெளியிட்டது. இன்று காலை 8 மணி நிலவரத்தின் படி, கடந்த 24 மணி நேரத்தில் 19 ஆயிரத்து 906 பேருக்குப் புதிதாக வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்னிக்கை 5 லட்சத்து 28 ஆயிரத்து 857 ஆக அதி கரித்துள்ளது. அதேபோல், வைரஸ் தாக்குதலுக்கு கடந்த 24 மணி நேரத்தில் 410 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் இந்தியாவில் கொரோனாவல் இறந்தவர்க ளின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 95 ஆக அதிகரித் துள்ளது. இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது என்பதையே இந்த 24மணிநேர அதி கரிப்புக் காட்டுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

## பெயரளவிலான நடவடிக்கை உதவாது

### கமல் கருத்து



சாத்தான்குளத்தில் பொலிஸாரின் தடுப்பில் அடுத்தடுத்து உயிரிழந்த தந்தை, மகன் விவகாரத்தில் பெயர ளவில் நடவடிக்கைகளை எடுக்க முயல்வது எதற்கும் உதவாது என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் தென்னிந்தியத் திரைப்பட நடிகரு மான கமல் ஹாசன் கூறினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டிருப்பதாவது:-

சாத்தான்குளத்தில் நிகழ்ந்திருக் கும் பென்னிக்ஸ் மற்றும் ஜெயராஜ் ஆகிய இருவரின் மரணமும், அத னைச் சுற்றி நிகழ்ந்திருக்கும் மனித உரிமை மீறல்களும், சட்ட மீறல்களும் நம்மில் எவருக்கு வேண்டுமானாலும் நிகழக் கூடும் என்ற அச்சத்தை நம் மிடையே விதைத்திருக்கிறது. ரத்தம் சொட்ட சொட்ட ஒருவரை கொல்வது கொலை பாதாகக் குற்றம். அதை செய்தவர் எவராயிருந்தாலும் அந்த தவறுக்கான தண்டனை வழங்கப் பட வேண்டும் என்கின்ற குரல்க ளுக்கு இடையில் இரண்டு காவல் உதவியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப் பதைப் பார்க்கும் போது, அரசு இந்த விடயத்தில் துளிக் கூட உண்மைத் தன்மையைக் கண் டறிய முயலவில்லை என்பது தெளி வாகத் தெரிகிறது.

இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவியும், நிவாரணமும் தேவை தான். ஆனால், அதை மட்டும் அவ சரமாக அறிவித்துவிட்டு இந்தக் கொலைகளை முதல்வர் கடந்து விடக் கூடாது. நிதி உதவியைவிட இரண்டு உயிர்களுக்கு நீதி தேவை எனக் குறிப்பிட்டுள்ளார் கமல் ஹாசன்.

## கைதிகளைத் தாக்கக்கூடாது பொலிஸாருக்கு அறிவுரை!

கைது செய்து அழைத்துவருபவர்களை அடிப்பதும், துன்புறுத்துவதும் சட்டப்படி தவறு என்றும் அவர்களு டைய மனதையும்கூடத் துன்புறுத்தக்கூடாது என் றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் சென்னைபொலிஸ்ஆணையாளர்ஏ.கே.விசுவநாதன்.

இது குறித்துச் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: காவல் பொலிஸ் நிலையத் திற்கு வருபவர்களை தாக்குவதும், துன்புறுத்துவதும் சட்டப்படி தவறு. யாருடைய மனதையும் புண்படுத்து வது போல் பேசக்கூடாது என பொலிஸாருக்குக் கூறியுள்ளோம். பொலிஸ் நிலையத்துக்கு வருபவர் களைத் தவறான முறையில் கையாளக் கூடாது என அனைத்து பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். கைதாகி காவல்நிலையத் திற்கு கொண்டுவருபவர்களை எப்படி நடத்தவேண்டும் என உச்சநீதிமன்றம் வழிகாட்டுதல் அளித்துள்ளது. அதைப் பின்பற்றவேண்டும் – என்றார்.

# தலிபான்களுக்கு ரஷ்யா ஊக்கமளிக்கிறது அமெ. பத்திரிகைச் செய்தியால் குழப்பம்



ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கச் சிப்பாய்களைத் தலிபான் பயங்கரவாதிகள் கொன்றால் அவர்களுக்கு ரஷ்ய உளவு அமைப்பு ஆயுதம், பண உதவி செய்வதாக அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இந்தச் செய்தி அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் குறித்து அதிபர் ட்ரம்ப் செய்தியாளர்கள் சந்திப்பில் பேச இருந்ததாகவும் ஆனால் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என குழப்பம் ஏற்பட்டதால் அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டதாகவும் வெள்ளை மாளிகை அதிகாரி தெரிவித்ததாக நியூயோர்க் ரைம்சில் செய்தி வெளியாகியது.

இந்த நிலையில், அமெரிக்கப் படைகளைத் தலிபான்கள் கொன்றால் தலிபான்களுக்கு ரஷ்ய உளவு அமைப்பு பணம், ஆயுத உதவி வழங்குவதாக பத்திரிக்கையில் வெளியான செய்தி குறித்து பதிலளிக்க வெள்ளை மாளிகை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தற்போது பூதாகாரம் ஆகி வரும் நிலையில் இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என ர;யா தெரிவித்துள்ளது.

அதேபோல் அமெரிக்கச் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தங்களால் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களையே பயன்படுத்துவதாகத் தலிபான்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொற்று நோயுடன் பொருளாதாரத் தடை

### இது கொடிய ஆண்டு என்கிறார் ஹசன் ரூஹானி



கொரோனா வைரஸ் காரணமாகவும் அமெரிக்காவின் செயல் காரணமாகவும் தனது நாடு பெரும் கடினத்தைச் சந்தித்து வருகின்றது என்று ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியில் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை அதிகரித்துள்ளமையால் எமது மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஈரானுடான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து 2018ஆம் ஆண்டில் அமெரிக்கா விலகியதிலிருந்து அதன் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. இதனால் ஈரானின் ரியால் நாணயத்தின் மதிப்பு மிகக் குறைந்த மட்டத்துக்குச் சரிந்தது.

இந்த நிலையிலேயே, எதிரியின் பொருளாதார அழுத்தம் மற்றும் தொற்றுநோய் காரணமாக இந்த ஆண்டு எங்களுக்கு மிகவும் கடினமான ஆண்டாக அமைந்துள்ளது என்று தொலைக்காட்சி உரை ஒன்றில் ரூஹானி கூறியுள்ளார்.



## துபாயில் ‘டிஸ்ட்ரிக் 2020’ உருவாகிறது பெரு நகரம்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய் நகரில் சுற்றுச்சூழல் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாகச் செயற்படுத்தப்பட்டுள்ள உலக கண்காட்சி வளாகத்தில் ‘டிஸ்ட்டிரிக் 2020’ என்கிற பெரியதொரு நகரம் உருவாகவுள்ளது.

இந்தப் பெரு நகரத் திட்டத்துக்குத் துபாய் சிறுதொழில் வளர்ச்சி மற்றும் முகம்மது பின் ராஷித் கண்டுபிடிப்பு நிதியம் ஆகியவை ஆதரவளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. துபாயில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள எக்ஸ்போ உலக கண்காட்சி வளாகத்தில் 80 சதவீத கட்டுமானங்கள் மீண்டும் பொதுமக்களுக்காக பயன்படுத்தப்பட உள்ளன.

இதற்காக அனைத்து தரப்பினரும் ஒன்றாக வசிக்கும் வகையில் புதிய சுற்றுச்சூழல் அமைப்பாக உலக கண்காட்சி வளாகத்தில் புதிய நகரமானது கட்டமைக்கப்பட்டு வருகிறது. நவீன தொழில்நுட்ப கட்டமைப்பு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் அனைத்து மாற்று தொழில்நுட்பங்களின் அடிப்படையில் இந்த நகரம் கட்டமைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நகரத்தில் 1 லட்சத்து 45 ஆயிரம் பேர் வசிக்க முடியும். மேலும் வர்த்தக நிறுவனங்கள், விடுதிகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்டவை இந்த வளாகத்தில் அமைய உள்ளன.

## ரஷ்யாவின் விமானத்தை இடைமறித்தது அமெரிக்கா

அலாஸ்காவின் வான் எல்லையருகே பறந்த ரஷ்யாவுக்குச் சொந்தமான உளவு விமானத்தை அமெரிக்காவின் போர் விமானங்கள் இடைமறித்தன.

அலாஸ்காவின் தெற்குக் கடற்கரை பகுதியில் உள்ள அல்யூடின் தீவுகளுக்கு அருகே சுமார் 65 கடல் மைல் தொலைவில் சர்வதேச வான் எல்லையில் பறந்த ரஷ்யாவின் டியூ - 142 ரக உளவு விமானமே இவ்வாறு இடைமறிக்கப்பட்டது. அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான எஃப் 22 ரக போர் விமானங்கள் மூலம் பயணத்தைத் தொடரவிடாமல் மறிக்கப்பட்ட ரஷ்ய விமானம் சர்வதேச வான்பரப்பில் பறந்து கொண்டிருந்ததால் அமெரிக்க போர் விமானங்கள் அதைத் திருப்பி அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இரு நாடுகளும் அவ்வப்போது எதிர் நாட்டின் எல்லைக்குள் ஆளில்லா உளவு விமானங்களை அனுப்பி எல்லைகளை கண்காணிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## கொரோனாவால் திணறும் அமெரிக்கா மீண்டும் முடக்கங்களுக்கு ஆயத்தம்

கொரோனா வைரஸ் தொற்று அமெரிக்காவில் வேகமாகப் பரவி வருவதால் அமெரிக்கா அரசு திணறிவருகின்றது.

அமெரிக்காவில் அறிவிக்கப்பட்ட சில தளர்வுகளை அடுத்தே இந்த அதிகரிப்பு உணரப்பட்டுள்தால், அங்கு மீண்டும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது அமெரிக்கா. அமெரிக்காவில் கொரோனா வைரஸால் 25 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாகப் புளோரிடா மற்றும் டெக்சாஸ் மாகாணங்களில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அண்மையில் தென் மாகாணங்களில் தளர்த்தப்பட்டன. வணிக நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டன.

இதையடுத்து அங்கு மீண்டும் வேகமாகக் கொரோனா பரவத் தொடங்கியது. இதையடுத்து மீண்டும் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இதுவரை கொரோனாவால் 25இலட்சத்து 96ஆயிரத்து 770 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா காரணமாக




அமெரிக்காவில் ஒரு லட்சத்து 28ஆயிரத்து 120 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சர்வதேச அளவில் கொரோனாவால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா இருக்கிறது. உலகளவில் ஒருகோடியே ஒரு லட்சத்து ஆயிரத்து 998பேர் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருக்கிறார்கள். இதில் நான்கில் ஒரு பங்கு தொகையை அமெரிக்கா தனதாக்கியுள்ளது.

## அதிபர் மாளிகையருகே தீ பிறேசிலில் பர பரப்பு




அமெரிக்காவுக்கு அடுத்துக் கொரோனாத் தொற்று அதிகம் பரவுகின்ற நாடாகப் பிறேசில் உள்ளது.

அங்கு 13இலட்சத்து 15ஆயிரத்து 941பேர் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். பிறேசில் அதிபர் ஜெயிர் போல்சனரோ கொரோனா வைரஸைச் சரியாக கையாளவில்லை எனத் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டுவருகிறது. இந்த நிலையில், அவரது கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் பிரேசிலியாவில் உள்ள அதிபர் மாளிகை முன்பு தனிநபர் ஒருவர் போராட்டம் நடத்தினார்.

அப்போது அந்த நபர் அதிபர் மாளிகை அருகே சென்று கொண்டிருந்த பேருந்தைத் திடீரென வழிமறித்து பெட்றோல் ஊற்றி அதற்குத் தீ வைத்தார். பஸ்சில் 10க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். அவர்கள் உடனடியாக வெளியே ஓடினர். இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் அந்த நபரை மடக்கிப் பிடித்தனர். அதனைத்தொடர்ந்து தீயணைப்புப் பணியாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். இந்தச் சம்பவத்தால் பிறேசிலின் தலைநகர் பரபரப்புக்குள்ளானது.

# ‘ரிப்போட்டர்’ தில்லைக்கு வயது 70

- வீரகத்தி தனபாலசிங்கம் -
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)




வடமராட்சியில் எங்காவது ஒரு சந்தியில் எவரிடமாவது 'ரிப்போர்ட்டரை கண்டீர்களா'என்றுகேட்டால்,அவர்கள் உடனே தில்லையைத்தான் கேட்கிறோம் என்று பதில் சொல்வார்கள்.

அந்தளவுக்கு தில்லைநாதன் வடமராட்சியில் மகா பிரபல்யம். அங்கு மாத்திரமல்ல,யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் பரவலாக அறியப்பட்ட செய்தியாளர் அவர். கொழும்பிலும் கூட பிரதான தமிழ்ப்பத்திரிகை நிறுவனங்களில் வடபகுதி செய்தியாளர்களைப் பற்றி பேசும்போது தில்லையின் கதை வராமல் இருக்காது.

அரைநூற்றாண்டு காலமாக பத்திரிகைத்துறைக்கு தன்னை அர்ப்பணித்து இன்னமும் கூட சுறுசுறுப்புக் குறையாமல் செயற்பட்டுக்கொண்டிருக்கும் 'தில்லை' என்று நாம் அன்புடன் அழைக்கும் சின்னத்துரை தில்லைநாதன் இன்றைய தினம் 70 ஆவது அகவையில் காலடி வைக்கிறார்.

மந்திகையை பிறப்பிடமாகக்கொண்ட தில்லையுடன் சுமார் நான்கு தசாப்தங்களாக எனக்கு நெருக்கமான நட்புறவு இருந்துவருகிறது. அவரது எளிமையான சுபாவமும் நகைச்சுவையுணர்வு நிறைந்த பேச்சும் எவரையும் எளிதாக அவர்பால் கவர்ந்துவிடும். தில்லைக்கு செய்தித்துறையில் நாட்டம் மிகவும் இளம் வயதில் அதாவது பள்ளிக்காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. அது ஒரு சுவாரஸ்யமான கதையும் கூட.

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் ஐந்து படிக்கும்போது தில்லையின் வகுப்பாசிரியரான டி.எம்.இராசலிங்கம் அந்தவேளையில் 'வீரகேசரி', 'ஈழநாடு' பத்திரிகைகளின் நிருபர்.ஒய்வான நேர இடைவெளியில் வகுப்பில் வைத்தே செய்திகளை எழுதிவிட்டு தினமும் அவற்றை தபாலில் சேர்ப்பதற்காக



மாணவர்களிடம் கொடுத்து அனுப்புவது அவர் வழக்கம். அவ்வாறு செய்திகளை தபாலில் சேர்க்கும் வேலையை விரும்பிச்செய்த மாணவர்களில் ஒருவர் தில்லை. ஆசிரியர் மறந்தாலும் தில்லை அவரிடம் சென்று "சேர் இன்று தபால் கந்தோருக்கு போகத்தேவையில்லையா?" - என்று தானாகவே கேட்டு செய்திகள் அடங்கிய தபாலுறைகளை வாங்கிக்கொள்வாராம். ஊரில் உள்ள புதினங்களை இந்த ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடம் கேட்டு அவற்றை செய்தியாக்குவதிலும் இராசலிங்கம் வல்லவராம். அவ்வாறு புதினங்களை அவருக்குச் சொல்வதில் தில்லைக்கு ஒரு பிரியம்.தாங்கள் தபாலில் சேர்த்த செய்திகள் பத்திரிகைகளில் வந்திருக்கிறதா என்று தேடி வாசிக்கும் ஆர்வத்தையும் தில்லை நாளடைவில் வளர்த்துக்கொண்டார். இவ்வாறுதான் பின்னாளில் பத்திரிகைத்துறையில் முழுமையாக தன்னை அர்ப்பணிப்பதற்கான விதையை ஊன்றிக்கொண்டதாக தில்லை கூறுவார்.

பாடசாலை முடிந்து தில்லை வீடு திரும்பும்போது மந்திகை வைத்தியசாலைச் சந்தியை கடந்தே செல்லவேண்டும். வைத்தியசாலையை சூழவுள்ள பகுதிகள் விவசாயிகள் நிறைந்தது. அந்த சந்தியில் தினமும் 'குழைத்தரகர்கள்' கூடி நிற்பார்கள். அவர்கள் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர்கள். வீடு நோக்கிச்செல்லும் தில்லையை அவர்கள் இடைமறித்து வீரகேசரியையும் ஈழநாட்டையும் கொடுத்து உரத்து வாசிக்கவைத்து நாட்டு நடப்புக்களை அறிந்துகொள்வார்கள். இதை தில்லை ஒருநாள், இரண்டுநாள் அல்ல தினமும் செய்ய வேண்டியேற்பட்டுவிட்டது. இரு பத்திரிகைகளிலும் இருந்த சகல செய்திகளையும் ஒன்றுவிடாமல் வாசிக்க வேண்டுமாம். தில்லை ஒன்றும் விருப்பமில்லாமல் அதைச் செய்யவுமில்லை. செய்திகளை முழுமையாக வாசித்துமுடிந்த உடனடியாக அந்த தரகர்கள் அருகில் இருந்த தேநீர் கடையில் வடை, பகோடா போன்ற பலகாரங்களை வாங்கி தில்லைக்கு கொடுப்பார்களாம். சிறு வயதில் இருந்தே தனக்கு பத்திரிகை வாசிப்பில் அக்கறை வளர்ந்ததற்கு அந்த 'மந்திகைச்சந்தி செய்தி வாசிப்பு' முக்கியமான ஒரு காரணம் என்று தில்லை தனது அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் கூறுவார்.

பாடசாலை கல்வியை முடித்துக்கொண்ட உடனடியாகவே தில்லை ஒரு செய்தியாளராக வேண்டும் என்பதை தவிர வேறு தொழிலில் நாட்டம் காட்டவில்லை. அவர் கண்டியில் இருந்து வெளியாகிக்கொண்டிருந்த 'செய்தி' என்ற பத்திரிகையின் நிருபராகவே செய்தித்துறையில் காலடி வைத்தார். அதன் ஆசிரியர் பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் மாமனாராவார். 'செய்தி' நடத்திய கட்டுரைப்போட்டிக்கு தில்லை எழுதிய அனுப்பிய கட்டுரைக்கு பரிசு கிடைத்தது. 50 ரூபா பரிசைப் பெறுவதற்காக அவர் 1968 ஆண்டு கண்டிக்கு சென்றபோது அந்த பத்திரிகையின் செய்தி ஆசிரியராக இருந்த காலஞ்சென்ற கே.ஜி.மகாதேவா (பிறகு அவர் ஈழநாடு பத்திரிகையின் செய்தி ஆசிரியராக பல வருடங்கள் சேவையாற்றினார்) நிருபராகப் பணியாற்றுமாறு கேட்கவே தில்லை மறுபேச்சின்றி இணங்கிக்கொண்டார். அன்று பத்திரிகைத்துறையில் பிரவேசித்த அவர் அதற்குப் பிறகு திரும்பிப்பார்க்கவில்லை. 52 வருடங்களாக நீண்டு இன்றும் தொடருகிறது அவரின் செய்திப்பணி.

பிறகு 1969 ஆம் ஆண்டில் 'ஈழநாடு' பத்திரிகையின் நெல்லியடி செய்தியாளராக இணைந்துகொண்ட தில்லை மூன்று வருடங்களில் (1972) 'வீரகேசரி'யின் புலோலி செய்தியாளரானார். வடமராட்சியின் திக்கம் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் வி.பி.சுந்தரலிங்கம் அன்றைய வீரகேசரி ஆசிரியர் கே. சிவப்பிரகாசத்துடன் தனக்கிருந்த நட்புறவை பயன்படுத்தி வாய்ப்பை தனக்கு பெற்றுக்கொடுத்தார் என நன்றியுணர்வுடன் தில்லை அடிக்கடி கூறுவார். 1987 வரை புலோலி செய்தியாளராக பணியாற்றிய அவரை வடமராட்சி 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கைக்கு பிறகு வீரகேசரியின் அன்றைய செய்தி ஆசிரியர் காலஞ்சென்ற செ.நடராஜா வடமராட்சி செய்தியாளராக கூடுதல் பொறுப்புகளுடன் மாற்றினார். பிறகு யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதை அடுத்து 1997 ஆம் ஆண்டில் அன்றைய வடபகுதி போர் நிலைவரங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாண செய்தியாளராக அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த ஒருவரே செயற்பட வேண்டும் என்று முடிவெடுத்த வீரகேசரி நிறுவனம் தில்லையை யாழ்நகரைத் தளமாகக்கொண்டு பணியாற்றும் யாழ்ப்பாண செய்தியாளராக பணியாற்ற வைத்தது. அது ஆபத்து நிறைந்த காலகட்டம் என்ற போதிலும், தில்லை எந்தவிதமான தயக்கமும் இன்றி துணிச்சலுடன் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 2009 வரை பணியாற்றினார்.

இலங்கை உள்நாட்டுப்போர் பிராந்தியச் செய்தியாளர்களுக்கு தேசியரீதியான முக்கியத்துவத்தை தவிர்க்கமுடியாமல் கொடுத்தது. பிராந்தியங்களில் இடம்பெற்ற சம்பவங்களே போர்க்காலத்தில் பெரும்பாலும் தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல, வெளியுலகினதும் கவனத்துக்குரியவையாக இருந்தன. அந்தவேளையில் பிராந்திய செய்தியாளர்கள் உள்நாட்டு ஊடகங்களினால் மாத்திரமல்ல, சர்வதேச ஊடகங்களினாலும் பெரிதும் நாடப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்களது செய்திகள் வடக்கு, கிழக்கில் போரின் விளைவான அவலங்களை உலகறியச்செய்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 40 ஆண்டு கால சகா ‘தொல்லை’நாதன்!

யாழ் குடாநாட்டின் ஊடகத்துறையின் கடந்த அரை நூற்றாண்டு கால சரித்திரத்தில் பிரிக்க முடியாத முக்கிய அங்கம் தில்லைநாதன்.

'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பது போல தில்லைநாதன் செய்திகள் மூலம் கிளப்பும் சர்ச்சை சமூக மேம்பாட்டுக்குப் பலனாக வந்து அமையும்.

யுத்த காலத்தில் அப்போதிருந்த போக்குவரத்து, தொலைத்தொடர்பு நெருக்கடிகளுக்கு மத்தியில் வடமராட்சி என்பது யாழ்ப்பாணத்திலிருந்து 'ரொம்பத் தொலைவு'.

சில காலங்களில் ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுகள், சினைப்பர் தாக்குதல்களுக்கு மத்தியில் இருண்ட பின்னர் வல்லை வெளியைத் தாண்டி பயணிப்பது என்பது நினைத்துப் பார்க்கவே அச்சம் தரும் விவகாரம்.

மாலைக்குப்பின்னர் வடமராட்சிப்பக்கம் இடம்பெறும் குண்டு வீச்சுகள், ஷெல் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள், கடலில் இடம்பெற்ற மோதல்கள் பற்றிய விவரங்களை அவசர கிறுக்கல் எழுத்தில் எழுதி யாரேனும் தெரிந்தவர்களைப் பிடித்து சைக்கிளில் வல்லை கடந்து யாழ் நகருக்குக் கொடுத்து விடுவார் தில்லை.

இரவில், வேளை கெட்ட வேளைக்கு வந்து சேரும் தில்லையின் செய்தியை அடுத்தநாள் பத்திரிகைக்கு விவரமாகச் சேர்ப்பதற்கு அதுவரை தயாரித்த முற்பக்கத்தைத் தலைகீழாக மாற்ற வேண்டியிருக்கும். அன்றைய தொழில்நுட்ப வசதியில் அது மலையைப் புரட்டும் வேலை.

இந்த நெருக்கடியால் எங்கள் ஆசிரிய பீடத்தில் 'தில்லை' என்ற பெயர் 'தொல்லை' ஆயிற்று.

கொழும்பில் 'தினபதி','சிந்தாமணி', 'சுடர் ஒளி', யாழ்ப்பாணத்தில் 'உதயன்', 'சஞ்சீவி', 'காலைக்கதிர்', பத்திரிகைகளில் சுமார் நாற்பது ஆண்டுகள் எங்களோடு பணியாற்றிய எங்கள் சகா, நண்பன் 'தொல்லை'நாதன்.

ஊடகத்துறை, ஊடகவியலாளர் பற்றிய தகவல் களஞ்சியம் அவர்.

எழுபது வயதிலும் ஊடகத்துறையில் துடிப்புடன் திகழும் அவரின் பணியை வாழ்த்துவது குடாநாட்டின் ஊடகத்துறையையே வாழ்த்துவதற்கு ஒப்பானது.

**ந.வித்தியாதரன்**
**(ஊடகவியலாளர்)**

# நிதி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் கடன், நிவாரணங்களை அளிக்க வேண்டும்

## இப்படிக் கோருகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள் கடன் நிவாரணங்களை வழங்க வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்காவிலுள்ள நிபுணத்துவ சங்கங்களுடைய அமைப்பின் 33 ஆவது வருடாந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் -

ஸ்ரீலங்காவைவழமையானபாதைக்கு மீண்டும் கொண்டு வருவதற்கு இரண்டு ஆண்டுகள் போதுமானது.

பொருளாதாரம் மேலும் பலவீனமடைவதை தடுத்து ஸ்திரத்தன்மையை பேணுவதுடன், முடிந்தளவு விரைவில் நாட்டைவழமையானநிலைக்குகொண்டு வருவதே மிக முக்கியமானது.

கோவிட் 19 இன் தாக்கம் காரணமாக பொருளாதாரத்தில் மிக முக்கியமான துறைகள் பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

இந்தப் பின்னடைவின் பாதகமான தாக்கம் ஸ்ரீலங்காவின் ஒட்டுமொத்த உள்நாட்டு மொத்த உற்பத்தியில் தீங்கை விளைவிக்கலாம்.

கொரோனா நெருக்கடி முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கையோடு பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலான மறுமலர்ச்சிதிட்டத்தின்மூலம்உடனடியாக வளர்ச்சியை விரைவுபடுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

உட்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்து போன்ற துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கி ஆகியன குறைந்தது இரண்டு வருடங்களுக்கு கடன் மீள்கொடுப்பனவை



பிற்போடுமாயின், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் தேவையான சலுகைகளையும் நிவாரணங்களையும் வழங்கக் கூடியதாக இருக்கும்.

அத்தகைய நிவாரணங்களை வழங்குவதன் ஊடாக அந்தந்த நாடுகள் பொருளாதாரத்தை தூண்ட முடியும் என்பதுடன், விரைவான மீட்சிக்கும் வழிவகுக்கலாம்.

தற்போதைய தருணத்தில் சர்வதேச சமூகம் இது குறித்து மிகவும் தீவிரமாக சிந்திக்கும்.

பொருளாதார கண்ணோட்டத்தில், முன்னால் உள்ள குறிப்பிடத்தக்க சவாலை எதிர்கொள்வது குறித்து கவனம் செலுத்துவதுடன், நடைமுறைத் திட்டங்கள் அமுல்படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டும். - அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மற்றும் யுனிசெவ்வின் பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலும் சர்வதேச நிதி நிறுவனங்கள் கடன் நிவாரணங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ மயமாக்கலை உறுதிப்படுத்தவே 19 ஆம் திருத்தத்தை நீக்குவதற்கு முயற்சி

## உள் இரகசியத்தை அம்பலப்படுதுகின்றார் சிறீதரன்





யாழ்ப்பாணம்,ஜூன்29

19 ஆவது திருத்தத்தை நீக்கினால் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாது போகும். அவ்வாறு நீக்கிவிட்டு அரச நிறுவனங்கள் பலவற்றுக்குத் தலைவர்களாக ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகளை நியமிக்க இருக்கிறார்கள். இவ்வாறு இராணுவ மயமாக்கலை உறுதிப்படுத்தவே 19 ஆவது திருத்தத்தை நீக்க முயற்சிக்கின்றனர்.

இராணுவமயமாக்கல்மூலம்ஜனாதிபதி கோட்டாபய தமிழர்களை முடக்கவும் நினைக்கிறார் - எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ் நகரில் நேற்று இளைஞர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்-

தமிழர்களாகிய இந்த மண்ணிலே 70ஆண்டுகளாக எமது உரிமைகளுக்காகப் போராடி வருகிறோம். தந்தை செல்வா தலைமையில் அகிம்சை ரீதியிலும் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஆயுத ரீதியாகவும் தமிழர்கள் போரடியிருக்கிறோம்.

தமிழர்களை ஆயுத ரீதியாகத் தோற்கடித்த மமதையில் 3 ஆவது தடவையாகவும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று கனவு கண்ட மகிந்த ராஜபக்ஷவைத் தமிழர்களே தோற்கடித்தனர்.

அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ தனிச் சிங்கள,பௌத்த வாக்குகளால் வெற்றி பெற்ற மமதையுடன், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்குவோம் என்பதை நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான செய்தியாக அரச தரப்பு கூறிவருகிறது. அவ்வாறு 19 ஆவது திருத்தத்தை நீக்கினால் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாது போகும். அவ்வாறு நீக்கிவிட்டு அரச நிறுவனங்கள் பலவற்றுக்குத் தலைவர்களாக ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகளை நியமிக்க இருக்கிறார்கள்.

தமிழர் தேசங்களில் புதிது புதிதாக இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

உலகிலேயே கொரோனா வைரஸை தடுப்பதற்காக ஓரிடத்தில் - ஆனையிறவில் - ஆயுதங்களைப் பொருத்திய நாடு இலங்கையே. - எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தனும் கலந்து கொண்டார்.

# தேர்தல் காலப்பகுதியில் ஆதாரமற்ற பிரசாரங்கள்

## கவலை தெரிவிக்கிறது 'கபே' அமைப்பு

தேர்தல் காலப்பகுதியில் அடிப்படையற்ற அறிவிப்புகள் மற்றும் ஆதாரமற்ற போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என 'கபே'அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, நிறைய தவறான புரிதல்கள் இடம்பெறுகின்றன எனவும் இந்த தவறான புரிதல்களால் இனவாதம் மற்றும் மதவாதம் அதிகரிப்பதாகவும் 'கபே' அமைப்பின் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சில சம்பவங்கள் தேர்தல் மேடைகளில் மற்றும் சமூக வலைத்தளங்களில் மீண்டும் வெளிவருவதால் சில வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகள்ள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

# தனிமைப்படுத்தல் வழிகாட்டல்களை பின்பற்றத் தவறின் தொற்றுப் பரவும்!

## சுகாதார வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை

தனிமைப்படுத்தல் சட்டத்தை பின்பற்ற தவறும் பட்சத்தில் கொரோனா வைரஸ் சமூகத்தில் அதிகளவு பரவுவதற்கான வாய்ப்பு ஏற்படலாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.



கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் நாம் வெற்றியை அடைந்துவிட்டோம் என்று எண்ணுவதற்கான நேரம் இது அல்ல. இந்தத் தொற்றுத் தொடர்பில் அபிவிருத்தியடைந்துள்ள ஜேர்மனி,நியூஸிலாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தற்போது என்ன நேர்ந்தது என்பதை அறிந்திருப்பீர்கள். இந்நாடுகளில் தொற்றுக்குள்ளானோர் மீண்டும் பதிவாகும் நிலை தற்போது அங்கு ஏற்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை தடுப்பதற்கு அனைவரும் முதலில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தனிமைப்படுத்தல் சட்டத்தை முடிந்தளவு பின்பற்றுங்கள். எதிர்காலத்தில் விமான நிலையம் திறக்கப்பட்ட பின்னர் நாட்டில் இந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை பின்பற்றுவது முக்கியமானது.

தொற்றுக் காலத்திற்கு மத்தியிலும் , அதேபோன்று இறுதியிலும் கொரோனா தொற்றில் இருந்து நாம் முழுமையாக பாகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, நாம் 46 வழிமுறைகளை நாட்டிற்கு அறிமுகப்படுத்தினோம். இந்த வழிமுறைகளில் மூன்று விடயங்களைப் பிரதான இலக்காக வைத்தோம். சமூக இடைவெளி, முகக்கவசம், கைகளை சுத்தமாக வைத்திருக்கும் செயற்பாடு ஆகியனவே அந்த மூன்றுமாகும்.

அண்மைக்காலமாக மக்கள், சில நிறுவனங்கள், சில அதிகாரத் தரப்பினர் இந்த விடயங்கள் குறித்து ஆர்வமின்றி இருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

நமது நாட்டில் இந்த தொற்று இல்லை, எதற்காக இதனை நடைமுறைப்படுத்துகிறீர்கள் என்று எவரேனும் ஒருவர் கேள்வி எழுப்பலாம். எம்மை விட பாரியளவில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மக்கள் எச்சரிக்கையுடன் செயற்படாத காரணத்தாலேயே அங்கு தொடர்ச்சியாக தொற்றுக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காலைக்கதிர் Kalaikkathir

## 'றிப்போட்டர்' தில்லைக்கு...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய பணியை இடர்மிகுந்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்புடன் செய்த யாழ்ப்பாணச் செய்தியாளர்களில் தில்லைக்கு ஒரு முக்கிய இடமுண்டு. உள்நாட்டுப்போரின் முடிவுக்குப் பிறகும் அவரின் பணி சுறுசுறுப்பாகத் தொடருகிறது.

1970 களின் பிற்பகுதியில் பருத்தித்துறையில் இடம்பெற்ற கமலம் கொலைவழக்கு, 1990 களின் பிற்பகுதியில் நடைபெற்ற செம்மணி கிருசாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு, கொலை வழக்கு விசாரணைகள் தொடர்பான செய்திகளை விரிவான முறையில் தில்லை அறிக்கையிட்டபோது முதலில் வீரகேசரியிலும் பின்னர் தினக்குரலிலும் நான் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அந்த வழக்கு விசாரணைகளின் தொகுப்புக்களை மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாசித்தார்கள். அந்த விசாரணைகள் பற்றிய செய்தி ஒரு நாள் பத்திரிகையில் வெளியாகத் தவறினாலும் உடனே வாசகர்களிடமிருந்து பத்திரிகை அலுவலகங்களுக்கு தொலைபேசி அழைப்பு வந்துவிடும். அந்தளவுக்கு சிறப்பான முறையில் தில்லை செய்திகளை தொகுத்தளித்தார்.

போர்க்கால கட்டத்தில் இடர்பாடுகளுக்கு மத்தியில் பணியாற்றிய பத்திரிகையாளர்களுக்கு இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் 2004 ஆம் ஆண்டில் விருது வழங்கிக் கௌரவித்த போது யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அந்த விருது தில்லைக்கு கிடைத்தது. அடுத்து அதே ஆண்டு ஜூலை மாதம் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் அமைப்பும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து கொழும்பில் நடத்துகின்ற பத்திரிகைத்துறைக்கான உயர்விருது விழாவிலும் தில்லை கௌரவிக்கப்பட்டார். அவரின் ஊடகத்துறைச் சேவையை பாராட்டி பருத்தித்துறை பிரதேச செயலகம் 2013 ஆம் ஆண்டில் 'கலைப்பருதி' பட்டம் வழங்கியது. கல்வி அமைச்சின் விருதொன்றும் அவருக்குக் கிடைத்தது.

பத்திரிகைத்துறைக்கு தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்த காலஞ்சென்ற வீரகேசரி யாழ்ப்பாணச் செய்தியாளர் செல்லத்துரை போன்று அனுபவம் மிக்கவர்களின் வரிசையில் வைத்து ஒப்பிடக்கூடிய ஒருவரான தில்லையை எந்த நேரத்தில் நேரடியாகக் கண்டாலும் அல்லது தொலைபேசியில் பேசினாலும் நலம் விசாரித்துவிட்டு அடுத்து உடனடியாக கதை பத்திரிகைத்துறை பற்றியதாக நகர்ந்துவிடும். அந்த துறைக்கு தன்னாலான பணியை தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்ற அவரின் ஆழமான ஆர்வத்தின் வெளிப்பாடே அது. தில்லை மிகுந்த ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து பத்திரிகைத்துறைப் பணியைத் தொடரவேண்டும் என்று மனமார வாழ்த்துகிறோம்.

# இராணுவத் தளபதி கூறுபவை பொய்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் சீற்றத்துடன் குற்றச்சாட்டு

(பிரபாகரன் டிலக்சன்)

"காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இராணுவத் தளபதியின் கருத்தினை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் கண்டன அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபைக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் அனுப்பவுள்ளோம்" - என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராசா தெரிவித்தார்.



"விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தவர்களை அந்த அமைப்பினரே கொன்று உடலை மறைத்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படுபவர்களும் அப்படி காணாமல் போயிருக்கலாம்' – என்ற இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் கருத்து தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டுவிட்டது, புலிகளை அழித்துவிட்டோம் என அரசாங்கம் அறிவித்த பின்னரே நாங்கள் எமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்தோம். முழுமையாக அழித்துவிட்டனர் எனக் கூறப்பட்ட புலிகள் எவ்வாறு சரணடைந்தவர்களை அழிக்க முடியும்? இராணுவத் தளபதி கூறுவதைப் போல் தங்களுடன் இருந்தவர்களை அழிக்க வேண்டிய தேவை புலிகளுக்கு இல்லை. அவர்கள் அப்படிப் பட்டவர்களும் அல்லர். இராணுவத் தளபதியின் கருத்தை யாரும் நம்பப் போவதும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடிய போது ஓமந்தை, செல்வபுரம், முள்ளிவாய்க்கால் ஆகிய மூன்று சோதனைச் சாவடிகளிலும் கையளித்த, சரணடைந்தவர்களின் விவரங்களை வெளியிடுமாறு கோரியிருந்தோம். அதனை வெளியிடுவார் என மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்திருந்தார். அனால் இன்று வரை அந்த விவரங்களை வெளியிடவில்லை.

எமது உறவுகளை கையளித்தற்கான, சரணடைந்ததற்கான நேரடி சாட்சியங்களாக நாங்கள் இருக்கின்றோம். காணாமல்ஆக்கப்பட்டோரை புலிகள் தான் கொன்றனர் என இராணுவத்தளபதி பொறுப்பற்ற பதிலை சொல்ல முடியாது. அது முற்றுமுழுதான பொய்யாகும்.

இராணுவத்தினர் குற்றங்களை இழைத்துவிட்டு புலிகள் மேல் பழியைப் போடுகின்றனர். இராணுவத்தினருடைய கையில் கொடுத்த எமது உறவுகள் பற்றி பொறுப்பற்ற பதிலை சொல்லிவிட்டுத் தப்பிக்க முடியாது.

நாங்கள் உயிரோடு இருக்கின்ற எமது உறவுகளை மீட்பதற்காகவும், எமக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்காகவுமே எமது ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். எனவே நாம் ஐக்கிய நாடுகள் சபை , சர்வதேசம், குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றின் மூலம் எமக்கான நீதியினைப் பெற்றுக்கொள்வதற்குத் தொடர்ந்து முயற்சிப்போம். – என்றார். (ம - 11)

## அஜித் ரோஹணவின் புதல்வியாரும் தனிமைப்படுதலில்

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவின் மகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

பெல்ருஸ் நாட்டில் உயர் கல்வியைத் தொடர்ந்த இவர், நேற்று அதிகாலை நாடுதிரும்பியுள்ளார் எனவும், ஆரம்பக்கட்ட பரிசோதனைகளின் பின்னர், இவர் 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## களுவாஞ்சிகுடியில் நேற்று இளம் பெண் படுகொலை





மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடி பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் பெண் ஒருவர், கொலை செய்யப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலய வீதியில் வசித்து வந்த இரு பிள்ளைகளின் தாயான துர்க்கா (34 வயது) என்பவரே, கொலை செய்யப்பட்டவர் ஆவார். இதையடுத்து, உயிரிழந்த பெண்ணின் கணவர், களுவாஞ்சிகுடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக, தனது மகளை மருமகனே கொலை செய்துள்ளார் என உயிரிழந்த பெண்ணின் தாயாரான தேவநேசராசா சாந்தநிதி பொலிஸில் முறையிட்டுள்ளார்.

களுவாஞ்சிகுடி பொலிஸாரும், மட்டக்களப்பு தடயவியல் பொலிஸ் பிரிவும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்னும் விக்னேஸ்வரன் வடக்கு முதலமைச்சரா?



## டக்ளஸ் கேட்ட கேள்வி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூன் 29

தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னாள் முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரனின் படம் அங்கு தொங்கியதை அவதானித்து இன்னுமா அவர் முதல்வராக இருக்கின்றார் என வினவியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சராக விக்னேஸ்வரன் இருக்கும்போது, மாகாண சபைக்கு உட்பட்ட சகல திணைக்களங்கள், அலுவலகங்களில் அவரது படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய தெல்லிப்பழை மருத்துவமனை மாகாணத்துக்கு கீழ் செயற்படும் மருத்துவமனை என்ற அடிப்படையில் அங்கும் விக்னேஸ்வரனின் படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அது கடந்த சனிக்கிழமை வரையில் அவ்வாறே காணப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை மருத்துமவனைக்குச் சென்றிருந்தார். கேட்போர் கூடத்தில் விக்னேஸ்வரனின் படத்தைப் பார்த்து, அவர் பதவியிலிருந்து அகன்று 2 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அவரது படம் இங்கு இருக்கின்றதா என்று கேட்டுள்ளார்.

இதன் பின்னர் முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் படம் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

### கடன் தவணை நீடிப்புக்கான

# இலங்கையின் வேண்டுகோளுக்கு இந்தியா பதில் தராது இழுத்தடிப்பு

கொழும்பு, ஜூன் 29

கடன்களை செலுத்தும் காலத்தை நீடித்துத் தருமாறு இந்தியாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு நான்கு மாதங்க ளாகியும் பதில் இல்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய பிரதமரிடம் இந்தக் கோரிக்கையை நேரடியாக விடுத்திருந்தார். எனினும் கடன் களை மீளச்செலுத்துவதற்கான காலத்தை நீடிக்கும் கோரிக்கைக்கு இன்னும் உரிய காரணத்தை இலங்கை தெரிவிக்கவில்லை.

அத்துடன் இது தொடரான பேச்சு எப்போது நடத்துவது என்பது குறித்து இலங்கை தரப்பு இதுவரை பதிலளிக்கவில்லை என்றும் இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்கு 50 கோடி டொலர் கடனுக்கு சீன



ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதிக்கு முன்னதாகவே உறுதிமொழி வழங்கியிருந்தார் என்பது தெரிந்ததே. இந்தியா - சீனாவுக்கு இடையில் மோதல் உருவாகி உள்ளதால் இது மீண்டும் இந்தியா, இலங்கைக்கு எதிராக சிவப்புக்கொடியை காட்டுவதற்கு வழியை ஏற்படுத்திவிடும் என்று இந்திய நாளிதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# 14 மாத சிகிச்சையின் பின் வீடு திரும்பினார் பெண்!



கொழும்பு, ஜுன் 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் காயமடைந்த பெண்ணொருவர் 14 மாதங்கள் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

36 வயதான திலின ஹர்ஷினி என்ற 3 பிள்ளைகளின் தாயாரே வீடு திரும்பியுள்ளார்.

நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் இவர் காயமடைந்தார்.

இவர் நடன ஆசிரியராவார். தாக்குதலில் முள்ளந்தண்டு கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார். வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய போதிலும், பூரண குணமடையவில்லை, சில பகுதி உணர்வற்றிருப்பதாகத் தெரிவித்துள்ளார். இடது கண் அகற்றப்பட்டுள்ளது. விரல்கள் சரியாக செயற்படாமலுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது, அவரும் மூன்று பிள்ளைகளும் தேவாலயத்தில் இருந்தனர். அவரது ஆறு வயதுடைய இரண்டாவது மகன் தாக்குதலில் உயிரிழந்தார். மற்ற பிள்ளைகளும் காயமடைந்து, குணமடைந்துள்ளனர்.

அவர் பலத்த காயங்களுடன் ராகம போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலை, தனியார் வைத்தியசாலையொன்றில் பல அறுவை சிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.

# எம்.சி.சியை வைத்து கோட்டாபய அரசியல்

## ரணில் அணி தாக்கு

எம்.சி.சி. ஒப்பந்தத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் செய்ய ஆரம்பித்திருக்கின்றார். அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமாட்டோம் என அரசால் ஏன் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாமல் இருக்கின்றது.?

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ருவான் விஜயவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அமெரிக்காவின் எம்.சி.சி. ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதிஇடம் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த அறிக்கையில் அமெரிக்க அரசு கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி தெரிவித்திருந்ததன் பிரகாரம் எமது அரசுக்கு எம்.சி.சி. ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிதி வழங்கவில்லை எனத் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் தேர்தலுக்காக இந்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி பொய்ப்பிரசாரம் மேற்கொள்வதையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம். அமெரிக்கப் பிரஜையாக இருந்த ஜனாதிபதி இந்த விடயத்தில் அவரின் உண்மையான நிலைப்பாட்டை இன்னும் பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தே ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வெற்றி பெற்றார்.

நாட்டை அமெரிக்காவுக்குத் தாரை வாக்கப்போவதாக அவரின் தொண்டர்கள் எமக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சியினர் அமெரிக்காவின் கையாட்கள் என்று அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், தற்போது யார் அமெரிக்காவின் கையாட்கள் என்பதை மக்கள் அறிந்துகொள்ளலாம்.

எம்.சி.சி. ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதா? இல்லையா? என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் தேர்தலில் பொய்ப் பிரசாரத்துக்கு இதனைப் பயன்படுத்தாமல் நீதியான தேர்தல் ஒன்றை நடத்த இடமளிக்க வேண்டும் – என்றார்.

# முதல் கட்டமாகப் இன்று பாடசாலைகள் ஆரம்பம்

## பெற்றோருக்கு அறிவுறுத்தல்கள்

கொழும்பு, ஜுன் 29

கொவிட் – 19 தொற்று வைரஸ் பரவல் காரணமாக, மூடப்பட்டிருந்த அனைத்து பாடசாலைகளும் இன்று திறக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கையின் கீழ் பாடசாலைகளை மீண்டும் திறப்பது பல கட்டங்களாக இடம்பெறும் என, கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிபக்கப்பட்ட பின்னர் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டிய பல விடயங்கள் தொடர்பில் சுகாதார துறை மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளது.

சளி, இருமல் மற்றும் காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டால் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என்று சுகாதார பிரிவினர் பெற்றோரை அறிவுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன மாணவர்களுக்கு முகக்கவசம் அணிவதற்கு தேவையான நடவடிக்கைகளை பெற்றோர் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். இதே போன்று பாடசாலைகளில் மாணவர்கள் கைகளை கழுவுதற்கு வசதிகளை செய்தல், இடைவெளியை கடைபிடித்தல் போன்றவற்றில் அடிக்கடி கவனம் செலுத்துதல் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு உள்ள பொறுப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலைகளை ஆரம்பிக்கும் முதல் கட்டத்தின் கீழ், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்காக அனைத்து பாடசாலைகளையும் இன்று முதல் திறப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினர் வழங்கிய சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய, பாடசாலைகள் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த மேலும் தெரிவித்தார்.

## இனி இது...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம்.

இந்தச் செய்தியை வாசித்த எமது அலுவலக நிருபர் ஒருவர் – இளைஞர் – ஒரு செய்தியை எழுதிக் கொண்டுவந்து தந்தார். அதை வாசித்த எனக்கு ஆச்சியமாக இருந்தது.

மேற்படி குற்றச்சாட்டுக்கு இலக்கான வேட்பாளரின் சகாவான மற்றொரு வேட்பாளரிடம் எமது செய்தியாளர் கருத்துக் கேட்டிருக்கின்றார். அவர் கூறிய பதில் தான் அந்தக் செய்தி.

“அந்த அம்மணி ஒரு மனநோயாளி. அவரைக் கட்சிக்குக் கூட்டி வந்தவர்களே அவரது மன நோய்க்கு வைத்தியம் செய்விக்க வேண்டும். மனநோயாளி கூறிய கருத்துக்கு எல்லாம் நான் பதில் கூற மாட்டேன். பதில் கூறத் தேவையில்லை.” – இப்படி அவர் பிய்த்து உதறியிருந்தார்.

அவரது வாதம் சரிதான். அதில் முரண்பட எனக்கு ஏதும் இல்லை. – ஒரேயொரு விடயத்தைத் தவிர.

நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்ற காலத்தை ஒட்டி அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், யார் யாரை வேட்பாளராக்குவது என்பது பேசப்பட்டது. அப்போது சாவகச்சேரிக்கு யாரைப் போடுவது என்று வந்த போது, சரசாலையைச் சேர்ந்த இந்த அம்மணியைப் போடலாம் என்று இதே வேட்பாளர் கூறியிருந்தார் என நம்பகமாக அறிந்திருந்தேன்.

சில மாதங்களுக்கு முன்னர் கட்சியின் சார்பில் வேட்பாளராக நியமிக்கப்படலாம் என்று தாம் கூறியவரையே இப்போது மனநோயாளி என்கின்றாரே இவர் என்பது தான் எனக்கு ஆச்சரியம்.

உண்மையில் வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படாததால்தான் அம்மணி மனநோயாளியாகி இப்படிப் புலம்புகின்றாரோ, என்னவோ...!

தந்தை செல்வா நினைவிடத்தில் வைத்தும் இப்படி ஒரு ஊடக ஏடாகூடப் பேட்டியை அம்மணி வழங்கியிருந்தார்.

அதுவும் வேட்பாளர் நியமனம் கை சறுக்கிப் போன கையோடுதான் நடந்தது.

இந்த வேட்பாளர் கூறுவது போல ஏதும் பிசகித்தான் போய் விட்டதோ...? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

–மின்னல்–

# தொழிலதிபர்களை வலையில் வீழ்த்தி பணம் கறந்த மொடல் அழகி சிக்கினார்

தொழிலதிபர்களை வலையில் வீழ்த்தி, அவர்களுடன் தவறாக இருந்து, அவர்களிடமிருந்த பெருந்தொகை பணத்தை கறந்த வந்த இளம் யுவதியை விளக்கமறியலில் வைக்க, கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

தேயிலை ஏற்றுமதி வர்த்தகர் ஒருவருடன் தவறாக இருந்து, இதை இரகசியமாக படம் பிடித்து, 10 மில்லியன் ரூபா பணம் கேட்டு மிரட்டிய விவகாரத்தில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிலியந்தலையை சேர்ந்த 24 வயதான இளம் யுவதியே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மொடல் அழகியான அவர், கடந்த சில காலமாக கொழும்பிலுள்ள பல முன்னணி தொழிலதிபர்களை வலையில் வீழ்த்தி பெருந்தொகை பணத்தை கறந்திருந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதிக பணம் சேர்க்க வேண்டுமென்ற ஆசையில் அவர் ஒரே சமயத்தில் பல தொழிலதிபர்களுடன் தவறாக இருந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கோடீஸ்வர வர்த்தகர்களுடன் களியாட்ட நிகழ்வுகளிற்கு செல்வது, மது விருந்துகளில் பங்கெடுப்பது என உல்லாச வாழ்க்கையை வாழ்ந்துள்ளார்.

இறுதியாக, கொழும்பிலுள்ள தேயிலை ஏற்றுமதி செய்யும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவருடன் அறிமுகமாகியுள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான 53 வயதான வர்த்தகரும், மொடல் அழகியும் கொழும்பில் உள்ள இரவு களியாட்ட விடுதிகள் மற்றும் 5 நட்சத்திர ஹொட்டல்களில் தவறாக இருந்துள்ளனர்.

இதன்போது, பெருந்தொகை பணத்தை அவரிடமிருந்து கறந்துள்ளார்.

நிறுவனத்தின் விளம்பரத்துறையிலும் மொடல் அழகியை அவர் இணைத்திருந்தார்.

பிலியந்தலையிலிருந்து கொழும்பிற்கு இடம்மாறி, மாதாந்தம் 35,000 ரூபா வாடகை செலுத்தி வீடொன்றையும் பெற்றுள்ளார்.

வர்த்தகரின் மகளின் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது, அவரிடம் 10 மில்லியன் ரூபா பணத்தை மொடல் அழகி கோரியுள்ளார். எனினும், வர்த்தகம் அதை மறுத்தபோது, அவர்களிற்குள் முரண்பாடு எழுந்தது.

இருவரும் தவறாக இருந்த சமயத்தில் எடுத்த புகைப்படங்களை காண்பித்து அவற்றை வெளியிடப் போவதாக மிரட்டியுள்ளார். வர்த்தகரை தொடர்ந்து அச்சுறுத்திவந்தநிலையில், அவர் பொலிசாரிடம் முறையிட்டார்.

மொடல் அழகியின் வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து 4 கையடக்க தொலைபேசிகள், 3 மடிக்கணிணிகளை மீட்டனர்.

அவற்றை பரிசோதித்தபோது, பல முன்னணி வர்த்தகர்களின் அந்தரங்க படங்கள் மற்றும் இரகசிய தகவல்கள் பல சேமித்து வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

அவர் கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

# அம்பாறையில் மாற்றம் கேட்கின்றார் கருணா

மாற்றம் ஒன்றை அம்பாறை மாவட்டத்தில் நாம் ஏற்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் எமது மக்களை பசப்பு வார்த்தைகளால் உரிமை என்ற பெயரில் ஏமாற்றினார்கள். இதை மக்கள் அறிவார்கள். எனவே சகல மக்களும் இணைந்து புதிய மாற்றுத் தலைமை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

– இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

தமிழர் மகா சபையின் வேட்பாளரான கருணா அம்மான் நேற்று முற்பகல் அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர் அமைந்துள்ள பிரபல சொர்ணம் நகை மாளிகைக்கு விஜயம் செய்தார். இதன் போது அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கஞ்சாவுடன் சிக்கிய யுவதி சரீரப் பிணையில் விடுவிப்பு

கேரளா கஞ்சா பக்கெட்டுக்களை தம்வசம் வைத்திருந்த குடும்ப பெண்ணை ரூபா ஓர் லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் எம்.எச்.முகம்மட் ஹம்சா அனுமதித்தார்.

போதைப்பொருள் தடுப்பு தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண உதவி மதுவரி ஆணையாளர் க.தர்மசீலன் மற்றும் அம்பாறை மாவட்ட மதுவரி அத்தியட்சகர் என்.சுசாதரன் வழிகாட்டலில் கல்முனை மதுவரி நிலைய பொறுப்பதிகாரி பொ.செல்வகுமார் தலைமையில் சென்ற குழுவினர் நேற்று முன்தினம் மாலை கல்முனை பிராந்தியத்திற்கு உட்பட்ட கோணாவத்தை - 8 அட்டாளைச்சேனை பகுதியில் திடீர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

இந்தத் தேடுதலில் அப்பகுதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயாரான 23 வயதுடைய குடும்ப பெண்ணை 9 சிறு பக்கெட் 5000 மில்லி கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்தனர்.

கைதான சந்தேக நபரான குடும்ப பெண்ணை அக்கரைப்பற்று நீதிவான் நிதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து ரூபா ஒரு லட்சம் சரீர பிணையில் செல்லுமாறு அக்கரைப்பற்று நீதிவான் எம்.எச்.முகம்மட் ஹம்சா உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு எதிர்வரும் ஜூலை 30 திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.





# தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி குளமங்காலில் பரப்புரைக் கூட்டம்









**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று மல்லாகம் குளமங்காலில் நடைபெற்றது.**

**இதில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமசந்திரன், அருந்தவபாலன், அனந்தி சசிதரன் மற்றும் அரசியல் பிரமுகர்கள், கட்சி ஆதரவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.**

# மட்டக்களப்பு முகத்துவாரத்தின் ஆற்றுவாயை இரவோடு இரவாக வெட்ட முயன்ற குழுவினர்

மட்டக்களப்பு முகத்துவாரம் ஆற்றுவாய் வெட்டும் முயற்சியில் ஈடுபட்டனர் எனக் கைதான வேட்பாளர் உட்பட 33 பேர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக அம்பாறை மாவட்ட பொதுஜன பெரமுன வேட்பாளர் ஒருவர் உட்பட 33 பேரை கைது செய்தமையுடன் 3 வாகனங்கள் மற்றும் மண்வெட்டிகளை மீட்டுள்ளனர் என மட்டக்களப்பு தலைமையக பொலிசார் தெரிவித்தனர். குறித்த வேட்பாளர் தலைமையில் அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்த 33ற்கு மேற்பட்டவர்களால் இவ் சட்டவிரோத நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டிருந்தது.

இதன் போது குறிப்பிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை கண்ணுற்ற அப்பகுதி பொதுமக்கள் சம்பவத்தை உடனடியாக முன்னாள் மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து அங்கு சென்ற முன்னாள் மாவட்ட அரச அதிபர் பொலிஸாரின் கவனத்திற்கும் இராணுவத்தினரின் கவனத்திற்கும் கொண்டுவந்தார். சந்தேக நபர்கள் பொதுமக்களின் உதவியுடன் கைது செய்யபட்டனர்.

மேலும் குறிப்பிட்ட சட்டவிரோத செயற்பாடு தொடர்பாக மாநகர முதல்லர் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் சனி இரவு 9.30 மணியளவில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட விவசாயிகள் வெள்ள நீரினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவிடம் முறையிட்டு முகத்துவாரம் ஆற்றுவாயினை வெட்டிவிடுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கரவாகுப்பற்று,நற்பிட்டிமுனைமற்றும்கிட்டங்கி,நாவிதன்வெளி விவசாயிகளின் தாழ்நில விவசாயக் காணிகள் முழுமையாக வெள்ளத்தினால் கிட்டத்தட்ட ஐயாயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளன என அவர்கள் முறையிட்டிருந்தனர். இது தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதி



பரும் பேசியதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் ஆற்றுவாய் வெட்டும் தீர்மானிக்கும் மாவட்ட செயலணி அவசரமாகக் கூடியது . தீர்மானம் எடுக்கவேண்டிய தேவையின் அடிப்படையில் கூட்டம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றிருந்தது.

மேலும் இவ்வாறானதொரு செயற்பாடு கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்று எமது மாவட்டம் கடும் வரட்சியை எதிர்கொண்டு குடி தண்ணீர் முழுமையாக மக்களுக்கு வழங்கமுடியாத நிலை ஏற்பட்டமையும் குறிப்பிட்ட கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. நீர் வடிந்தோடுவதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவாக காணப்படுவது துறைசார் திணைக்களத் தலைவர்கள் அங்கு குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த செய்தியை அறிந்த அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 50ற்கு மேற்பட்ட நபர்கள் இரவோடு இரவாக வாகனத்தில் வந்து வாகனங்கள மயிலம்பாவெளிப்பகுதியில் நிறுத்தி விட்டு சகலரும் நடந்து வந்து அவசரமாக ஆற்றுவாயினை வெட்டியுள்ளனர். இதனை கண்ணுற்ற பிரதேச பொதுமக்களின் உதவியுடன் சம்பவம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது குறிப்பிட்ட பகுதியில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக இரு வாரங்களுக்கு இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என மாவட்ட பிரிகேடியர் தெரிவித்துள்ளார்.

திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீ லங்கா பெரமுனை கட்சியின் 2 ம் இலக்க வேட்பாளர் கீர்த்தி ஸ்ரீ விஜயசிங்க தலைமையிலான குழுவினரே இவ் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இந்த முகத்துவாரம் வெட்டுவதானால் கமநல சேவைகள், மற்றும் நீர்ப்பாசன சேவைகள் திணைக்களம், அரசாங்க அதிபர் ஆகியோரின் அனுமதியுடன் அதனை வெட்டவேண்டும். இருந்தபோதும் அதனையும் மீறி சட்டவிரோதமாக மூடப்பட்டுள்ள மட்டக்களப்பு முகத்துவார ஆற்றுவாயை வெட்டினால் மட்டக்களப்பு ஆற்றிலுள்ள மீன்கள் இல்லாமல் போகும், மற்றும் கிணறுகளில் நீர் இல்லாமல் போகும் போன்ற பல பிரச்சனைகள் ஏற்படும் .எனவே இந்த ஆற்றுவாயை வெட்டமுடியாது அதேவேளை அம்பாறை மாவட்டதிலுள்ள அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரம், தம்பட்டை, முகத்துவாரம், ஒலுவில் முகத்துவாரம் போன்றவற்றின் ஆற்றுவாயை வெட்டமுடியும் என முன்னாள் மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.


## அன்பொளி கல்வியகம்

**தரம் 4, தரம் 5 பலமைப்பரிசில் வகுப்புக்கள் மட்டும் ஆரம்பமாகின்றன.**

**29.06.2020 திங்கள் தொடக்கம் 03.07.2020 வெள்ளி வரை பி.ப. 2.00 - 5.00மணி வரை முற்கூட்டியே உங்கள் வரவை உறுதிப்படுத்தி புதிய நேர அட்டவணையை நேரில் பெற்றோர்கள் பெற்றுக் கொள்ளயும்.**

**இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

**இயக்குநர்.**


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2020 இல் வெளியிடப்பெற்றது.